
# திராவிடநாடு



# செய்திகள்

## வீரர்கோட்டம்

சூயஸ் கால்வாயின் வடமுகத்திலிருக்கும் துறைமுகம் 'போர்ட் செட்', பிரச்னைக்குரியதாக இருந்து வருகிறது. எகிப்துக்குச் சொந்தமான அந்த இடத்தைத்தான் அண்மையில் இங்கிலாந்தும் பிரான்சும் படையெடுத்துக் கைப்பற்றின. மாற்ருர் கையில் விழாது அதைக் காப்பாற்ற எகிப்து நாட்டு வீரர்கள் பலர் வீர மரணமடைந்தனர்! அந்த வீரர்களின் நினைவாக, 'போர்ட் செட்'டை 'போர்ட் ஆவ் ஹீரோஸ்' (வீரர்களின் துறைமுகம்) என்று பெயர் சூட்டி அழைக்குமாறு எகிப்து சர்க்காருக்கு, மக்களிடமிருந்து கடிதங்கள் வந்தவண்ணமுள்ளனவாம்! சூயஸ் கால்வாய் கம்பெனி ஏற்பட, 19ம் நூற்ருண்டில் செட்பாஷா என்பார் காலத்தில் அனுமதி வழங்கப்பட்டதையொட்டி அத் துறைமுகம் அவர் பெயரால் இருந்து வருகிறது. பழையபெயர் —உலகம் அறிந்தது — என்பதற்காக எகிப்து சர்க்கார், மக்களின் கடிதங்களை 'தூ! தூ!' என்று வீசியெறிந்துவிடவில்லை. வீரர்களின் திருச்சின்னமாக அந்த இடத்தின் பெயரை மாற்றுவது பற்றி ஆலோசிப்பதாகத் தெரிகிறது! வெள்ளையன் வழங்கிய சென்னை மாகாணம் என்பதை 'தமிழ்நாடு' என்று அமைக்க, கடிதங்கள் அல்ல, கண்ணீர் சிந்தியும் உயிர் விட்டும், 'நம்ம' சர்க்கார் மறுக்கிறது-வெறுக்கிறது!

★

## அந்த விதம்

அனில்கே சந்தா என்று டில்லியில் ஒரு டெபுடி மந்திரி இருக்கிருர்! கடந்த ஓரிரு மாதமாக அவர் என்ன செய்துகொண்டுள்ளார் தெரியுமா? கலாச்சார தூதுக்குழு ஒன்றை அழைத்துப்போய் ரஷ்யாவை ரசித்தார்! அதற்காக நம்முடைய வரிப்பணத்தில் ரூ. 3,68,800—0—0 செலவாயிருப்பதாகப் பார்லிமெண்டில் வெளியிடப் பட்டிருக்கிறது, கலாச்சார தூதுக்குழுவுக்கு, அமைச்சர் போகாவிடில் ரஷ்யாவைச் சுற்றிப்பார்க்கத் தெரியாதா, என்று கேட்காதீர்கள். ஒரு சான்ஸ்! இது சமயம் தவறினுல் மறுசமயம் வாய்ப்பதேது? சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தன்னுடைய 'கோட்டா'வைப் பூர்த்திசெய்து கொண்டிருக்கிருர், சந்தா. அவர் அழைத்துப்போனுரே கலாச்சாரத் தூதுக்குழு—அதில் நமது வடுவூரார்களுக்கும் முத்தமிழ் கலா வித்வரத்னங்களுக்கும் இடமளிக்கப் பட்டதா என்று கேட்கத் தோன்றும். இவர்கள் யாரும் கிடையாது. அனுபவிக்கப் பிறந்தது வடக்கு! அடிபணியப் பிறந்தது தெற்கு!!

★

## பெரிய அண்ணன்!

'என்னுடைய பெரிய அண்ணன்' என்று பெருமையோடு குறிப்பிடுகிருர், வடக்கு வியட்நாம் விடுதலை வீரரான ஹோ-சி-மின் சீனப் பிரதமர், சூஎன்லாய்க்கு சென்ற கிழமை, வியட்நாமில் அளிக்கப் பட்ட வரவேற்பின்போது.

"முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவரை நான் பாரிசில் முதன் முதலாகச் சந்தித்தேன். அப்போது நான் சிறியவன்! அப்போதே அவர் பெரியவர்!!" என்று குறிப்பிட்டிருக்கிருர் ஹோ. அண்ணன் இன்று சீனுவின் திலகம்! அவருக்கு எந்தவிதத்திலும் தம்பியும் சளைக்கவில்லை — இந்தோசீனத்தின் எழில் விளக்காக விளங்கி வருகிருர்!! பெரியவர், சின்னவர் என்கிற பேதம், விடுதலை வரலாற்றில் ஏது? அண்ணனும் தன் வாழ்நாளில் சீன விடுதலையைக் கண்டார்! தம்பியும் அதைச் சாதித்துவிட்டார்! இருவரும், தலைவர்களாக, கரம்குலுக்கி மகிழ்ந்திருக்கின்றனர்.

★

## பைத்தியக்காரர்களிலும் பங்கு!

மாகாணங்களைப் புனரமைத்தார்களே—அதில் எல்லையையும் சொத்துக்களையுமட்டுமல்ல, பைத்தியக்காரர்களையும் கூடப் பங்குபோட்டிருக்கிருர்கள். ஐதராபாத் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்த 100 பேரில், தெலிங்கானுவுக்கு 60-ம் மாரத்வாடாவுக்கு 25-ம், கர்னுடகத்துக்கு 15 மாக அனுப்பிவைத்திருக்கிருர்கள். பைத்தியக்காரர்களைக் கூடச் சரியாகப் பங்கிட்டுப் பாதுகாப்புஅளிக்கும்ஆர்வம் இருக்கிறது அங்கே! ஒழுங்கான எல்லைகளைப் பெற்றுக்கொள்ளவும், சொத்துக்களைப் பெறவுமான திறமை கூட இல்லை, இங்கே!!

★

## லாமாக்கள் நாட்டில்!

வெளியே கிளம்பாது இதுவரை இருந்த திபெத்திய லாமாக்கள் இந்திய உபகண்டத்துக்கு வந்துள்ளார்களல்லவா? அவர்களுடைய நாட்டில் கடந்த 30ந் தேதி மகளிர் மாநாடு ஒன்று நடைபெற்றிருக்கிறது. அம்மாநாட்டில், "பெண்கள் ஒவ்வொருவரும் திபெத்தின் மக்கள் தொகையை அபிவிருத்தி செய்வதில் முழுமூச்சுடன் பணிபுரிய வேண்டும்", என்று வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

★

## வீராங்கனைகள்

★

ஆண்களை நம்பி அலுத்தலுத்துப் போனதாலோ என்னவோ, மகளிர் எழுவர் போர்ச்சுகீசிய ஆதிக்கத் தலைவரின் மனைவிக்கே, கடிதம் எழுதியுள்ளனர். "அம்மணி! உங்கள் கணவர் போர்த்துகீசிய தலைவர் க்ரவீரோ லோப்சுவிடமும், உங்கள் நாட்டுப் பிரதமர் சலாசரிடமும் சொல்லி, எங்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறும்படி சொல்லுங்கள். மனித நீதிக்கு மாருன செயலாகும், கோவாவை இன்னும் விடாமலிருப்பது. இதை எடுத்துச் சொல்லிப் பரிகாரம் தேடவேண்டுகிருேம்", என்பதாக. கோவாவில் போர்த்துகீசியர் ஆதிக்கம் அரும்பிய 446வது ஆண்டு விழாவை யொட்டி இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்கள்.

"கோவாவிலுள்ள பெண்கள் உங்கள் கணவரது சட்டத்தால் வாய்மூடிக் கிடக்கிருர்கள். அவர்களது சார்பில் நாங்கள் கேட்கிருேம். கிருஸ்துவ நீதிக்கு ஏற்றதல்ல இப்போக்கு. மனித நீதிக்கு மாருனது. எங்கள் தாய் நாட்டை விட்டு அமைதியுடன் வெளியேறச் செய்யுங்கள். இன்றேல், ஏதாவது செய்து, எங்கள் நாட்டை மீட்க நேரிடும்" என்று அக்கடிதமூலம் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர். இக்கடிதம் தீட்டிய எழுவரும் பம்பாயிலிருப்பவர்கள்!!

★

காஞ்சீபுரம்

9—12—'56

# தம்பி !

மருத்துவ விடுதிக்கு உன்னை அழைத்துச் செல்லப் போகிறேன், வருகிறாயா? ஒவ்வொரு அண்ணன் தன் உடன் பிறந்தானை, புதிதாகக் கட்டிய மாளிகை, மணம் பரப்பும் மலர்வனம், அருவிக்கரை, என்பன போன்ற இடங்களுக்கு அழைத்துப் போய்க் காட்டுவார்கள்—குறைந்தபட்சம் ஒரு சிற்றுண்டிச் சாலைக்காவது அழைத்துச் செல்வார்கள் — எனக்கும் ஒரு அண்ணன் இருக்கிறானே, மருத்துவ மனைக்கு அழைத்துப் போகிறேன் என்று கூறிட, என்று கூறிக் கோபித்துக்கொள்ளாதே சோகமடையாதே! காரணம் இருக்கிறது, உன்னை அங்கு அழைத்துச் சென்றிட. வா, தம்பி, வா!

அதோ பார்! பாபம்! உடலெங்கும் புண்!! உடனிருந்து அவனுக்கு உபசாரம் செய்துகொண்டிருக்கிறாரே, அண்ணன்போல! அவர் எதிர்வீட்டுக்காரர், அண்ணன் அல்ல! துடிதுடிக்கிறான் இளைஞன்.

பயப்படாதே, மகனே! பயப்படாதே! ஆபத்து இல்லை என்று மருத்துவர் கூறுகிறார், பயம் இல்லை, உனக்கு ஒரு குறையும் நேரிடாது! கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு வலியைப் பொறுத்துக்கொள்!— என்று கனிவுடன் கூறிக்கொண்டே, தளும்பும் தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார்களே ஒரு அம்மையார் அவர்கள் அவன் தாய் அல்ல!!

உடனே இங்கே அழைத்து வந்தது நல்லதாயிற்று! பைத்யக்காரத்தனமாக, எண்ணெய் தடவலாம், பச்சிலை வைத்துக் கட்டலாம் என்று இருந்துவிட்டிருந்தீர்களானால், இந்நேரம் 'ஜன்னி' பிறந்து மிகமிக ஆபத்தாகிவிட்டிருக்கும். இப்போது ஒரு பத்து நாள் படுக்கையில் இருக்க வேண்டும், அவ்வளவுதான், உயிருக்கு ஒரு துளியும் ஆபத்து இல்லை—என்று உள்ளன்புடன் பேசுகிறாரே, டாக்டர், அவர் வழக்கமாக வாங்கும் கட்டணத்தை வாங்காதது மட்டுமல்ல, அவரே பணம்போட்டு வாங்கிக் கொடுத்ததுதான், தட்டில் இருக்கும் பழம், மேஜை மீது இருக்கும் வலி வலிக்கும் பானம், எல்லாம்! டாக்டர், இந்த இளைஞனுக்கு நீண்ட நாளாகப் பழக்கமானவரல்ல—முதல் முறையாகத்தான் சந்தித்தார்!!

தெரிகிறது அண்ணா! தெரிகிறது. இவர் யாரோ சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளை, அதனாலேதான் அனைவரும் இவ்வளவு கனிவு காட்டுகிறார்கள் என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா!

இதோ! இந்தத் தனி அறைப்பக்கமாகப் போகலாம் வா, தம்பி!

உஸ்! பேசாதே! மெல்ல நட!—என்று உத்தரவிட்டுக்கொண்டு நிற்கிற இந்த ஆசாமிக்கு, மாதம் அறுபது ரூபாய் சம்பளம்! அதோ இரண்டு நர்சுகள் பேசிக்கொள்கிறார்கள்—என்னவென்று கவனிப்போம்.

# வெற்றிபுரி செல்ல....

"வாடி, லிலி! இனி நீ போய் அந்தச் சனியனைப் பார்த்துக் கொள். எனக்குத் தலைவலிக்கிறது. கண்றாவி"

"கிரேஸ்! எனக்கு மட்டும் வேதனையாக இருக்காதா? என்ன சொல்லுகிறது கிழம்?"

"யார் பேசினார்கள் அதனிடம்! அருகே நெருங்கினாலே, குமட்டலல்லவா எடுக்கிறது, ஒரே நாற்றம்"

"டாக்டர், என்ன சொல்கிறார்?"

"அவர் ஒன்றும் சொல்லுவதில்லை, வருகிறார், மருந்து பூசுகிறார், கட்டுகிறார்கள். கிழம், இளிக்கிறது. இன்னும் எத்தனை நாள் ஆகும் என்று கேட்கிறது. நானென்ன ஜோதிடனா? என்று அலட்சியமாகப் பதில் அளிக்கிறார் டாக்டர்"

"நல்ல வேலை செய்தார்! ஆமாம். இந்த ஆசாமியிடம் யார்தான் முகம் கொடுத்துப் பேசுவார்கள்"

லிலியுடன், தம்பி, நாமும், உள்ளே எட்டிப் பார்க்கலாமா? அதோ பார்! உடலிலே பல இடங்களிலே புண்!! ஆசாமிக்கு வலி அதிகம்தான். முகத்திலே பார், சவக்களை என்பார்களே, அப்படி இருக்கிறதல்லவா?

மேலே மின்சார விசிறி இருந்தும், பக்கத்தில் நின்றபடி மயில் விசிறி கொண்டு வீசிக்கொண்டு நிற்கிறானே, அவன் பாவம், நான்கு குழந்தைகளுக்குத் தகப்பன்—நாய் பிழைப்புத்தான்! இருந்தாலும் என்ன செய்வது! என்று சகித்துக் கொண்டு ஊழியம் செய்கிறான்.

அதோ அந்த அலங்கார ஆசனத்தில் அமர்ந்துகொண்டு இருப்பவன், படுக்கையில் உள்ளவருக்கு மருமகன். எப்படி இருக்கிறது என்று விசாரித்துவிட்டுப்போகத்தான் வந்தான், இப்போது அவன் கரத்தில் இருப்பது ஒரு கதைப் புத்தகம்—படத்தைப் பார்த்து இரசித்துக்கொண்டிருக்கிறான்.

தம்பி! இந்த ஆசாமிதான் உண்மையில், சீமான்!

முதலில் கண்டோமே அவன் அன்றாடம் உழைத்துப் பிழைப்பவன்—பாட்டாளியாக இருப்பதால் பராரியாகாமலிருப்பவன்! தனி அறையில் உள்ள தனவான் இரும்பு வியாபாரத்தால் கொழுத்தவர்—பெயர் தங்கப்பர். பாட்டாளியாக இருப்பவன், இரும்புப் பட்டறையில் வேலைசெய்பவன், பெயர் ஆண்டியப்பன்.

ஆண்டியிடம் இவ்வளவு அன்பு காட்டுகிறார்கள் — உடன் இருப்போர், மருத்துவர், அனைவரும்.

சீமான் தங்கப்பரிடம் மருத்துவரும் மருகரும், பணியாளும் பாங்கியரும், அனைவரும் அருவருப்புக் காட்டுகின்றனர்.

தங்கப்பர், மருத்துவ விடுதிக்கு ஆயிரக் கணக்கில் நன்கொடை கூடத் தரக்கூடும்—வசதி உண்டு.

ஆண்டிக்கு, பழவகையே டாக்டர் தம் செலவில் வாங்கிக்கொடுத்தார்.

காரணம் என்ன, இந்த நிலைமைக்கு? எண்ணிப்பார்!

இதிலென்ன சிரமம்? இந்த மருத்துவ விடுதி ஏழைக்கு இரங்கும் நெஞ்சம் படைத்தவர்களால் நடத்தப்பட்டு வருகிறது, செல்வச் செருக்கர்களைச் சீந்துவதில்லை; சரியான முறைதான்—நல்லது... என்று மகிழ்ச்சியுடன் கூறப்போகிறாய். தம்பி! இங்கு நீ காணும் இந்தப்போக்குக்குக் காரணம், இது அல்ல. இதுமட்டுமல்ல.

படுக்கையில் துடித்துக்கொண்டிருக்கும் ஆண்டியப்பன், உடலில் தீப்புண்கள ஏற்பட இருந்த காரணம் வேறு — சீந்துவாரற்றுச் சாய்ந்து கிடக்கும் அந்தச் சீமானுடைய உடலிலே காணப்படும் புண்களுக்குக் காரணம் வேறு— இந்த இரு வேறு காரணங்கள்தான், இருவேறு விதமான மனப்பான்மையை, காண்போருக்கும் உடன் இருப்போருக்கும் உண்டாக்கி விட்டிருக்கிறது.

ஆண்டியின் உடலில் ஏற்பட்டுள்ள தீப்புண்களைக் காணும் போது, ஐயோ பாவம்! — என்று இரக்கமும் அன்பும் கலந்த குரலில் கூறுகிறார்கள்—சீமான் தங்கப்பன் உடலில் உள்ள புண்களைக் கண்டதும், "சனியன்! கண்றாவி!" என்று அருவருப்புடன் பேசுகிறார்கள்.

ஆண்டி உழைத்து அலுத்த நிலையில் தன் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்—இருட்டும் சமயம். ஐயயோ! என்ற கூக்குரல் கேட்டது, தெருக்கோடியில் ஒரு வீடு, தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது—பலர் பதறினர்—தண்ணீர் இறைத்தனர்—மணல் வாரி வாரி வீசினர். ஒரு மூதாட்டி, தலைவிரி கோலமாக நின்றுகொண்டு, "ஐயோ! குழந்தை, தொட்டிலில்... தொட்டிலில் குழந்தை..." என்று கதறி நிற்கக் கண்டனர் பலரும். பெருநெருப்பாகிவிட்டது வீடு— உள்ளே நுழைய யாருக்கும் துணிவு இல்லை. உள்ளே ஓட முயன்ற மூதாட்டியை மட்டும் தடுத்து நிறுத்திவிட்டனர். ஆண்டி வந்தான்—அலறல் கேட்டான்— உள்ளே, குழந்தை, தொட்டிலில்— என்ற மூன்றே வார்த்தைகள்தான் —எதிரே பெரு நெருப்பு — பாய்ந்தோடினான் உள்ளே!

ஐயோ! ஐயோ! என்று அலறினர்—ஆண்டியின் காதில் மூதாட்டியின் குரலொலி தவிர, வேறு எதுவும் விழவில்லை.

இரண்டோர் விநாடியில் ஆண்டி, குழந்தையுடன் ஓடிவந்தான் வெளியே! குழந்தையை ஒரு பெரிய சாக்குப் போட்டு மூடி இருந்தான் —குழந்தை பிழைத்தது, ஆண்டியின் உடலெல்லாம் தீப் புண்!!

சீமான் தங்கப்பன் தன் தோட்டத்தில் குடிசைபோட்டுக்கொண்டு குடியிருந்து வந்த குற்றேவல்கார முனியனை, பக்கத்து ஊருக்கு ஒரு வேலையாக அனுப்பிவிட்டு, பசுமாடு இளைத்துவிட்டதே, சரியாக தீனி போடுவதில்லையா? என்று அதிகாரம் பேசும் பாவனையில் இரவு எட்டு மணிக்கு மேல் குடிசைக்குச் சென்று, "சத்யத்துக்குப் பொதுவாக நடக்கிறோம் எஜமான்! சாமிசாட்சியா, பசுவுக்குச் சரியான படி தீனி போடுகிறோம் எஜமான். சந்தேகப்படாதீங்க" என்று சமாதானம் கூறிய குப்பியை......! பசுமாடு, அவள் போட்ட கூச்சலில் மிரண்டு, கட்டு அறுத்துக்கொண்

டது—சீமான் அதனிடம் சிக்கிக் கொண்டான் — அன்றுடம் தீனி போட்டு அன்புடன் பராமரிக்கும் குப்பியின் கற்பைக் காப்பாற்றும் கடமையை அந்தப் பசு மேற்கொண்டது — சீமான் உடலிலே புண் இந்த வகையில் ஏற்பட்டது!

ஆண்டியிடம் அனைவரும் அன்பு காட்டுவதற்கும் சீமானிடம் அருவருப்பு அடைவதற்கும் இப்போது காரணம் விளக்கமாகி விட்டதல்லவா! இந்த விளக்கம் பெறத்தான், நாம் மருத்துவ மனை வந்தோம். இனி வா, தம்பி, வேறோர் காட்சி காண்போம்.

விளக்கம் சரி, அண்ணு! ஆனல் இப்போது இந்தக் காட்சியும் அது அளித்திடும் கருத்துரையும், என்ன காரணத்துக்காக, என்று இப்போது கேட்க வேண்டாம் — மற்றோர் காட்சியையும் பார்த்து விட்டுப் பேசுவோம்.

அதோ பார், ஏழ்மையாலும் அடியோடு அழித்திட முடியாத அழகும் அதற்குப் பெட்டகமாக விளங்கும் இளமையும் கொண்ட பெண் மயில்!! பொன்னகை ஒன்று கூட இல்லை—அந்தப் புன்னகை ஒன்று போதாதா என்று அவளைத் தன் குடும்ப விளக்காகப் பெற்ற குணவான் கூறிக் களிப்படைகிறுன் போலும். ஆடையிலே அழுக்கு! கூந்தலில் நெய் இல்லை! ஆனல் கண்களிலே ஓர் கனிவு கவர்ச்சி அளிக்கிறது. போனமாத வாடகை பாக்கிக்காக 'மூக்குத்தி'யை மார்வாடியிடம் விற்றுவிட்டு பத்தரை ரூபாய் வாங்கிக்கொண்டு செல்கிறுள் அந்தப் பாவை. கலியாணத்தன்று அவள் அத்தை வீட்டார் கொடுத்த இரவல் நகையைப் போட்டு அலங்கரித்துக் கொண்டு,எடுத்த போட்டோ படத்துக்கு கண்ணுடி போட எண்ணினுள்—அதற்கு இரண்டு ரூபாய் கேட்டான் கடைக்காரன்—அவ்வளவுக்குச் சக்தி இல்லை என்று கூறி விட்டுத் திரும்பினுள். மடியில் இருக்கிறது படம்! வயிற்றிலே தவழ்கிறது செல்வம்!!

"லட்சுமீ! எங்கேடிம்மா போய்விட்டு, வர்றே?"

"மார்வாடி கடைக்குத்தான் மாமி"

"எதை வித்துப் போட்டு வந்தூட்டே?"

"மூக்குத்தியை......"

"அதுவும் தொலைஞ்சுதா... ........"

"மூக்குத்தி போனு என்ன மாமி! மூக்கு, இருக்குதேல்லோ......"

"போடி, போக்கிரிப் பெண்ணே! மூக்கு இருக்குதாம், மூக்கு! இருக்கு, மூக்கும் முழியும் ராஜாத்திக்கு இருக்கிறது போலத்தான் இருக்கு. இருந்து? தரித்திரம் பிடுங்கித் திங்குதே..."

"அதனுலே என்ன மாமி! நகைபோட்டாத்தானு..."

"உன்னேடு யார் பேசுவாங்க...அதிகமாக எதுவும் வேணும்...மூக்குத்தி, காதுக்குக் கம்மல்...கையிலே ஒரு இரண்டு வளை......"

"கழுத்துமட்டும் என்ன குத்தம் செய்தது, மாமி. இரண்டு 'வடம்' செயின் போடக் கூடாதா அதுக்கு... ........"

"குறும்புக்காரப்பொண்ணு. அதெல்லாம் போட்டா பதினுயிரம் கண்ணு வேணும் பார்க்க, என்பாங்களே, அப்படி இருக்கும். உம்! பகவான் அழகைக் கொடுத்தாரு, அதுக்கு ஏத்த அந்தஸ்து கொடுத்தாரா......"

"போ, மாமி! எத்தனையுன்னுதான் அவரும் கொடுப்பாரு......"

சிரித்துக்கொண்டே செல்கிறுள் செல்லாயி!

"அவலட்சணம்னு, சொல்லி முடியாது, டோய்! அட்டைக் கருப்பு! மாறுகண்ணு! உதடு, தடிம்மனு, என்னமோபோல இருக்குது. காது, துளிண்டு, எலி காது போல...செச்சே! இராத்திரிவேளையிலே, பார்த்தா, பயமே வந்துவிடும். அந்தச் சனியனுக்குக் குரல் இருக்கு பாரு, அசல் ஆந்தையேதான்......"

செல்லாயி புருஷன், தம்பி, இது போலப் பேசுவது. மெகானிக் மாதவனிடம் பேசுகிறுன். யாரைப்பற்றி இந்த வர்ணனை தெரியுமோ? தன் எஜமானருக்கு வந்துள்ள மருமகப் பெண்ணைப்பற்றி. செல்லாயி புருஷன் சிகப்பண்ணனுக்கு, மோடார் ஓட்டும் வேலை மோட்டூரார் வீட்டில்!!

அந்த மருமகள் அவ்வளவு அவலட்சணம் என்றுனே, வா, போய்ப் பார்ப்போம்.

இதோ இதுதான், **மோட்டூரார்** மாளிகை!

ஊஞ்சலில் தெரிகிறதா, உருவம் ...மூக்கும் முழியும், கையும் காலும், சரியாகத் தெரியவில்லையே என்கிறுயா, தம்பி, தெரியாது. எல்லாம் சேர்ந்துதான் ஒரு மாமிசப் பிண்டமாகத் தெரிகிறதல்லவா—மோட்டூரார் மருமகள் **கமலாம்பிகா**வைக் காண்கிறுய்.

கூடவே நீ காண்பது என்னென்ன தெரியுமா, தம்பி, அதை மறந்துவிடாதே!

காதிலே மூவாயிரம் ரூபாயில் வைரத் தோடு! தலைச்சடையில் ஆயிரத்தைந்நூறு ரூபாய் பெறுமானமுள்ள வைரத் திருகுபில்லை. மூக்குத்திகள் பச்சை! இரண்டாயிரம்! கழுத்திலே புரளும் தங்கமும் வைரமும், பத்தாயிரத்துக்கு மேல் பெறுமானமுள்ளது! இடுப்பில் காணப்படும், ஒட்டியாணத்தைச் செய்யும்போது 'பத்தர்' வீட்டிலே, ஒரே சிரிப்பு—இது என்ன இடுப்புக்கா, அல்லது நெல்கொட்டும் குதிருக்கா என்று கேட்டுக் கேலி செய்து, வீட்டார் சிரித்தார்கள்! கல் இழைத்தது! மயில் தெரிகிறதா? அருமையான வேலைப்பாடு! ஆறுயிரம் மதிப்பிடுகிறுர்கள். காலில், கமலாம்பிகா அணிந்திருப்பதை, அவர்களாலும் காணமுடியாது, நாமும் பார்க்க முடியாது; ஆடை தரையிலே புரளுவதால், நகை மறைந்து கிடக்கிறது நமக்குத்தெரியவில்லை! கமலாம்பிகாவின் உடல் அமைப்பு பாபம், குனிந்து, தன் காலில் உள்ளதைக் காணவிடவில்லை! ஆபரணச் சுமைதாங்கி, தம்பி, இந்தக் கமலாம்பிகா!

செல்லாயிக்கு மூக்குத்தியும்

இல்லை— முகம் செந்தாமரையாக இருக்கிறது.

காணச் சகிக்கவில்லை இந்தக் கமலாம்பிகையை— பூட்டியிருக்கும் நகைகளின் மதிப்பு மட்டும் பலப் பல ஆயிரம்!

இந்த அவலட்சணத்துக்கு இவ்வளவு நகை இருக்கிறது! நகைகளின் அழகே பாழாகிறது, இந்தச்சனியன் மேலே பூட்டியதும். மரத்தாலே பாவை செய்து, பூட்டி வைத்தால்கூட, இந்த நகைகளைப் பார்க்க இலட்சணமாக இருக்கும், என்று கூடப் பேசிக்கொள்கிறார்கள்!

மூக்கும் முழியும் ராஜாத்திபோல இருக்கிறது, செல்லாயிக்கு; மூக்குத்திக்குக்கூட வழி இல்லை!

இதோ, மூலைக்கோயில் காளி உருவாரம் போலக் காணப்படும் கமலாம்பிகையின் உடலிலே ஆபரணச் சுமை!!

தம்பி! செல்லாயி, கமலாம்பிகை — இருவரில் யாரைக் கண்டதும், முகம் மலரும் சொல்லு.

ஆண்டி— தங்கப்பன் மருத்துவ மனையில்!

செல்லாயி—கமலாம்பிகா அவரவர் மனையில்!!

இந்தக் காட்சிகள், ஏன் நான் காணச் சொன்னேன் தெரியுமா?

தம்பி! நமது முன்னேற்றக் கழகம், தீப்பிடித்துக் கொண்ட குடிசைக்குள்ளே தீரமாக நுழைந்து, தொட்டிலில் இருந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து காப்பாற்றியதால், உடலெங்கும் தீப்புண் ஏற்பட்டு, மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு அனைவராலும் அன்புடன் பராமரிக்கப்பட்டு வரும், ஆண்டியப்பன்!

வாடகை பாக்கிக்காக மூக்குத்தியை மார்வாடிக்கடையிலேவிற்றுவிட்டு வீடு திரும்பும், அழகி செல்லாயி போல என்றும் சொல்லலாம். காங்கிரஸ், கமலாம்பிகை போல ஆபரணச் சுமைதாங்கியாகக் காட்சி அளிக்கிறது! நம்மை, செல்லாயி போல மூக்கும்முழியும், பார்த்தால் ராஜாத்திபோல இருக்கிறது என்று நல்லமனம் படைத்தோர் பாராட்டத்தான் செய்கிறார்கள். கமலாம்பிகையின் உடலில் புரளும் நகைகளைப் பார்த்தவர்கள், இந்த அவலட்சணத்துக்கு இவ்வளவு ஆபரணச் சுமை கிடைத்

(16-ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டனில் பார்லிமெண்ட்-கட்சிகள் நிலை

| பொதுத் தேர்தல்கள் | கன்சர்வேடிவ் | லிபரல் | லேபர் | மற்றவர்கள் |
|---|---|---|---|---|
| 1918 | 366 | 165 | 72 | 9 |
| 1922 | 347 | 117 | 142 | 9 |
| 1923 | 259 | 159 | 191 | 6 |
| 1924 | 413 | 40 | 151 | 11 |
| 1929 | 260 | 58 | 289 | 8 |
| 1931 | 471 | 68 | 65 | 11 |
| 1935 | 390 | 54 | 166 | 5 |
| 1945 | 215 | 12 | 399 | 14 |
| 1950 | 299 | 9 | 315 | 2 |
| 1951 | 321 | 6 | 296 | 2 |

## 1945ம் ஆண்டில்

| கட்சி | வெற்றி | தோல்வி | மொத்தம் |
|---|---|---|---|
| கன்சர்வேடிவ் | 215 | 415 | 630 |
| லிபரல் | 12 | 295 | 307 |
| லேபர் | 399 | 236 | 635 |
| கம்யூனிஸ்டு | 2 | 19 | 21 |

## 1950ம் ஆண்டில்

| கட்சி | வெற்றி | தோல்வி | மொத்தம் |
|---|---|---|---|
| கன்சர்வேடிவ் | 272 | 285 | 557 |
| லிபரல் | 9 | 466 | 475 |
| லேபர் | 315 | 313 | 628 |
| கம்யூனிஸ்டு | —0— | 100 | 100 |

## 1951ம் ஆண்டில்

| கட்சி | வெற்றி | தோல்வி | மொத்தம் |
|---|---|---|---|
| கன்சர்வேடிவ் | 321 | 297 | 618 |
| லிபரல் | 6 | 103 | 109 |
| லேபர் | 296 | 326 | 622 |
| கம்யூனிஸ்டு | —0— | 10 | 10 |

# தணலில் தங்கம்

**12**

மா. கி. தசரதன்

பேராசிரியரும் ஆசிரியரும் வந்து போன அன்று இரவு நான் ஏதேதோ எண்ணிக் குழம்பியவாறே நெடுநேரம் உறக்கம் கொள்ளாமல் கழித்தேன். சலனமின்றிக் கிடந்த என் மனமும் சஞ்சலம் கொண்டு தவிக்கத் தொடங்கியது போல் உணர்ந்தேன். முற்றும் துறந்தோம் என்று சொல்லிவிட்டுப் போய் காட்டில் கடுந்தவம் கொண்டவர்கள் கன்னியரின் கடைக்கண் வீச்சில் மயங்கிக் காவி துறந்து கவிபாடிய செய்திகளைக் கதைகளில் கேட்டிருக்கின்றேன். நானும் உணர்ச்சிகளை வென்றுவிட்டதாக நினைத்து வந்தேன். ஆனால் மனமோ மீண்டும் மீண்டும் அங்கேயே தாவித்தாவிக் குதித்துப் பற்றிக்கொள்ளத் துடித்தது.

கணவரைப் பற்றியும் ஓரகத்தியைப் பற்றியும் அவள் கணவரைப் பற்றியும் என்னென்னவோ எண்ணினேன். என் நிலையைப் பற்றி நினைந்து கண்ணீர் வடித்தேன். இரவெல்லாம் துன்பக் கேணியில் கரை காணமல் தவித்துக்கொண்டிருந்தவள் எப்போது உறங்கினேன் என்பது தெரியாது. உடலின் சோர்வும், உள்ளத்தின் வாட்டமும் என்னைத் தாலாட்டித் தூங்கவைத்தனபோலும்.

'பொல பொல' எனப் பொழுது விடியும் நேரம் 'தங்கம் தங்கம்' என்று என் தாய் மெல்லக் குரல் கொடுத்து எழுப்பியதை உணர்ந்தேன். உற்றுக் கேட்டேன், அது என் தாயின் குரல் தானா என்று அறிய. அவரேதான் என்று அறிந்தபோது எனக்கு வியப்பு தான் மிகுந்தது. 'பாவம் குழந்தை அலுத்துத் தூங்குகின்றாள் இப்போது எழுப்பவேண்டாம்' என்று சொல்லி எல்லா வேலைகளையும் தானே செய்யும் அவர் இன்று செய்வதற்கு ஒரு வேலையும் இல்லாதபோது இவ்வளவு காலையில் எழுப்புவானேன் என்று அறியாமல் விழித்தேன்.

"என்னம்மா இவ்வளவு சீக்கிரம்?" என்று கேட்டவாறு எழுந்து சோம்பல் முறித்தேன்.

"வாம்மா, சீக்கிரம் வா சொல்லுகின்றேன்" என்றார். அவர் குரலில் பரபரப்பு இருந்தது; ஆவல் தெரிந்தது.

சிறு பெண்போல் அம்மா குறுகுறு என நடந்து வெளித் தாழ்வாரத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கே குழலியாரும் அப்பாவும் எங்கோ புறப்படுவதுபோல் தயாராக நின்றிருந்தனர். நெல் வரவில்லை என்று நேற்றுப் பேசிக்கொண்டிருந்தார்களே, அதனால் ஊருக்கு போகின்றார்கள் என நொடியில் உணர்ந்தேன். ஆனால் அதற்கு என்னை அழைப்பானேன். ஒரு வேலை சொல்லிவிட்டுப் போகவோ' என்று எண்ணி,

"ஊருக்குத்தானோ அப்பா? மாலையில் வந்துவிடுவீர்கள் அல்லவா?" என்றேன்.

"ஆமாம் அம்மா. ஊருக்குத்தான். உன் கணவன் ஊருக்கு நீயும் தான்" என்றார் குழலியார்.

நான் ஒன்றும் விளங்காது இருவர் முகத்தையும் மாறிமாறிப் பார்த்தேன்.

"நேற்று ஆசிரியர் சொன்னசெய்தியைக் கேட்ட பிறகு இப்போது நீ அங்கு போவது நல்லது என்று இவர் சொன்னார் அம்மா" என்று அப்பா குழலியாரைக் காட்டினார்.

"ஆமாம் தங்கம், நான்தான் சொன்னேன். போவது நல்லது என்றே நினைக்கின்றேன்" என்று குழலியார் சொன்னார்.

அம்மாவோ ஏதும் பேசாமல் ஏக்கம் நிறைந்த பார்வையை என் மீது செலுத்திக்கொண்டிருந்தார்.

என்ன செய்வது என்று அறியாமல் நான் எல்லோர் முகத்தையும் பார்த்தேன். எனக்கு என்னமோ அங்கே போவதினால் பலன் ஏற்படும் என்று தோன்றவே இல்லை. ஒரு வழியாக எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு இங்கு வந்து தனித்து வாழத் தொடங்கிவிட்ட பிறகு மீண்டும் மீண்டும் அந்த வாழ்க்கைக்குச் செல்ல ஏன் முயலவேண்டும் என்று எண்ணினேன். அந்த வாழ்வு வேண்டாம் என்று நான் வெறுத்துத் தள்ளிவிட விரும்பவில்லை. ஆனால் வேண்டியது கிடைக்காவிட்டால் வேதனை இன்னும் வளரத்தானே செய்யும்? வம்பை விலை கொடுத்து வாங்குவானேன், என்று எண்ணினேன். ஆறிவருகின்ற புண்ணைக் கிளறிப்பார்த்தால் மீண்டும் தான் அங்கே இரணம் உண்டாகப் போகின்றது. புண் ஏற்பட்டதினால் அந்த இடத்தில் வடு இருக்கத்தான் செய்யும். வடுவுக்குப் பயந்து புண்ணைக் கிளறிக்கொண்டிருந்தால் ஆறாத பெரும் புண் ஏற்பட்டுப் புரை பாய்ந்துவிட்டால் என்ன செய்வது? உறுப்பையே வெட்டினால்தான் உயிராவது தரிக்க இயலும்.

உறுப்பாக இருந்தால் வெட்டி எறிந்துவிடலாம்; உற்ற துணையும் வேறு நாடிப்பெறலாம். ஆனால் இவர்கள் மேற்கொள்ளும் முயற்சியினால் மனப்புண் அல்லவா மீண்டும் இரணமாகும். உடலில் ஏற்படும் புண்ணையாவது ஆற்றிக்கொள்ளலாம். மனதில் ஏற்படும் புண்ணை என்ன செய்வது? முன்பே புண்பட்ட மனத்துடன் போராடிப் போராடி இந்தப் புதுவகை வாழ்வில் ஒருவகை அமைதியைப் பெற்று வருகின்றேன். இதிலும் புண் ஏற்றால் என்ன ஆவது என்று எண்ணினேன். எப்படியாவது அன்று அவர்களுடன் ஊர்க்குப் போவதை நிறுத்த வேண்டும் என நினைத்தேன்.

"வேண்டாம் அம்மா, நான் சொல்கிறேனே என்று கோபம் வேண்டாம். எனக்கு அங்கு போவதில் பலனில்லை என்றே படுகின்றது, உங்கள் விருப்பத்தையும் தடை செய்யவில்லை. இன்னும் கொஞ்ச நாட்கள் கழித்துப் போகலாமே" என்றேன்.

அன்று போகாமல் தப்பினால் போதும் என்று அப்படிச்சொன்னேன். அம்மாவும் மெல்ல என் பக்கம் சேர்ந்துவிட்டார். அப்பா என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்.

"சரி, உனக்கு விருப்பம் இல்லையானால் வேண்டாம், பிறகே போவோம்" என்றார் குழலியார்.

"செய்த ஏற்பாட்டை ஏன் மாற்றுகின்றீர்கள்? இன்று நம் ஊருக்குப் போய் நெல் ஏன் வந்து சேரவில்லை என்று பார்த்து வாருங்களேன்" என்றேன் அப்பாவிடம்.

''அதற்கென்ன அவசரம், நாளை கூட போகலாம்'' என்ருர் குழலியார்.

மறுநாள் மாலை குழந்தைகள் எல் லோரும் மாலை விளையாட்டிலிருந்து மீண்டுவந்து கைகால்களைக் கழுவிக் கொண்டிருந்தனர். மணிமேகலை என் தோள்மீது சாய்ந்து கிடந்தாள். நானும் அம்மாவும் நொடிக்கு ஒரு முறை வாயிலைப் பார்ப்பதும் ஊருக் குப்போன அப்பாவும், கருங்குழலி யாரும் இன்னும் ஏன் வரவில்லை என்று கேட்பதுபோல் ஒருவரை ஒரு வர் பார்ப்பதுமாக இருந்தோம்.

கார் மதில் வாயிலைக் கடந்து உள்ளே வந்து நின்றதும் அப்பாவும் அந்த அம்மையாரும் இறங்கிஉள்ளே வந்தனர். அப்பாவின் முகத்தில் கவலைக் கோடுகளும் அமைதிக் கோடுகளும் கலந்து காணப்பட்டன. கருங்குழலியார் முகத்தில் புதிய பொலிவைக் கண்டேன்.

''குழந்தை நலன்தானே அம்மா?' என்ருர் அப்பா. உணவு உண்டு முடிகிறவரை சிலசில சொற்களே பேசினேம். அம்மா அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களைப்பற்றி எல்லாம் விடாமல் கேட்டுக்கொண்டே இருந் தார். ''எல்லோரும் நலன்தான்'' என்று அப்பா சுருக்கமாகச் சொன் ஞர்.

உண்டு முடிந்ததும் அப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டிருந்த இடத்தை நோக்கி நடந்தேன். குழந்தைகளை எல்லாம் ஒருமுறை மேற்பார்வை பார்த்து முடித்துவிட் டுக் குழலியாரும் அங்கு வந்தார்கள்.

பால்போல் வெண்மையான நிலவு தண் ஒளி வீசிக்கொண்டிருந்தது. நீண்ட கருமேகங்கள் கூட்டங் கூட்ட மாக வானத்தில் அலைத்துச் சற்று நேரம் முழுமதியை மறைத்து உல கத்தில் மாய இருள் பரப்புவதும் பிறகு விலகிச் சென்று வெண்ணில வின் ஒளி புலப்படுத்துவதுமாக அவை அங்கே விளையாடிக்கொண் டிருந்தன. குழந்தை மணிமேகலை தொட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

வானத்து நிலவை எட்டிப் பிடிக்க முயலும் கடல் அலைகளின் பேரிரைச் சல் கேட்டுக்கொண்டே இருந்தது. அதைக் கேட்டு உலகத்தில் மனி தர்களும் இந்தக் கடலைப்போலத் தானே எட்ட முடியாதவைகளுக்காக ஏங்கி ஏங்கித் தவிக்கின்றனர் என எண்ணினேன்.

குழலியார்தான் பேச்சைத் தொடங் கினர்.

''தங்கத்திற்குச் சொல்லிவிட்டீர் களா?'' என்ருர்.

''இன்னும் இல்லை'' நீங்கள் வரு வீர்கள் என்று இருந்தேன்'' என்ருர் அப்பா.

நான் ஒன்றும் விளங்காமல் திகைத்தேன்.

''இன்று உன் குடும்பத்துச் செய்தி மற்றும் ஒன்றைக் கேட்டோம் தங் கம்'' என்ருர் குழலியார்.

''என்னம்மா'' என்றேன், நெஞ்சம் துணுக்குற்றவண்ணம்.

''உன் ஓரகத்தி......'' என்று தயங் கினர்.

''சொல்லுங்கள் அம்மா''

''பொன்னுசாமி என்ருர்களே அவனுடன்......''

''அவனுடன்?''

''போய்விட்டாளாம்''

''என்ன?''

''ஆமாம் அம்மா. இன்று நீ பிறந்த ஊருக்குப் போனபோது அங்கே சொன்ஞர்கள்'' என்ருர்.

''அடிப்பாவி'' என்று அம்மா அதிர்ந்தார்.

சற்று நேரம் அந்தச் சிறு கூட்டத் தில் அமைதி நிலவியது.

ஓரகத்தியை நினைந்து அவளுக் காக இரங்கினேன். நிலையான வாழ் வைக் கருதாமல் இங்கும் அங்குமாக அலைந்து திரியும் அவள் நாடோடித் தன்மையை எண்ணி வருந்தினேன். இன்பம் இன்பம் என்று எதையோ நினைந்துகொண்டு துன்பத்தின் இரும்புக் கரங்களில் சிக்கித் தவிக் கின்ருளே என அனுதாப்பட்டேன். இக்கரையில் மேயும் ஆடு அக் கரை பச்சையாக இருக்கும் என்று எண்ணி ஓடி அலைந்து ஓய்வதுபோல் திரிகின்ருளே என நொந்தேன். நீர்வேட்கை எல்லார்க்கும் எழுவது தான். அந்த இயற்கைத் தேவையை நிறைசெய்ய உண்மை நீரை நாடி ஞல் பலன் கிடைக்கும். ஆனல் இவளோ கானலைக் கண்டு நீர் என்று ஓடி ஏமாந்து சாகும் மான்போல் மயங்கிக் கானல் நீர் அருந்த நினைக் கின்ருளே எனக் கலங்கினேன்.

மீண்டும் பேச்சு துவங்கியது. அமைதியைக் கலைத்து அம்மாவே பேசினள்.

''அப்படியானல் இப்போது தங்கம் அங்கே போனல் நல்லதுதானே? ஒருவேளை அவள் கணவன் மனம் மாறி இருக்கலாம் அல்லவா?'' என்ருர்.

அதைக் கேட்டு என் மனம் நகைத் தது. எனக்கு என்னமோ மீண்டும் அங்கே வாழ்வது இயலும் என்று தோன்றவில்லை. ஆனல் என்வாழ்வே எல்லாம் என்று நினைக்கும் அம்மா இன்னும் நம்பிக்கையை இழக்காமல் இருக்கின்ருள். அவள் நம்பிக்கை யைக் குலைப்பானேன் என நான் ஏதும் பேசாது வாளா இருந்தேன்.

''அதைத்தான் அம்மா, நான் சொன்னேன். ஆனல் உங்கள் கண வர் ஏனே உறுதியில்லாமல் இருக் கிருர்'' என்ருர் குழலியார்.

''அவருக்கு எப்போதும் அதுதான் வழக்கம். எனக்கு என்னமோ நம் பிக்கை இருக்கிறது''என்ருர், அம்மா.

''அதற்குத்தான் தங்கத்தையும் குழந்தை மணிமேகலையையும் அழைத் துப்போவது என்று தீர்மானித்திருக் கின்றேன்'' என்ருர் குழலியார்.

''சரி அப்படியே செய்வோம்'' என் ருர் அப்பா.

தொட்டிலில் இருந்த மணிமேகலை தூக்கம் கலைந்து தன் குரல் எடுத்து அழுதாள். ஓடிச் சென்று தொட்டிலை அசைத்து அவள் உறங்கிய பின் மீண்டும் வந்தேன்.

நான் வந்தபோது ''அதெல்லாம் காலம் கெட்டுப்போச்சு'' என்று அம்மா சொல்லிக்கொண்டிருந்தாள்.

இந்த அம்மா எப்போதும் இப்படித் தான் 'காலம் கெட்டுவிட்டது' 'காலம் கெட்டுவிட்டது' என்று பல்லவிபோல் பாடிக்கொண்டு என நினைந்து நகைத்தேன்.

''என்ன என்று கேட்டவாறு பேச்சில் கலந்தேன்.''

''நம் ஊர் சேதிதான் அம்மா'' என் ருர் அம்மா.

''என்னது?'' என்றேன்.

''ஊரில் உழவுத் தொழில் செய்கின் றவர்கள் எல்லோரும் வேலை நிறுத் தம் செய்துள்ளனர்'' என்ருர் குழ லியார்.

''என்னது? எங்கள் ஊரிலா? தொழிலாளரா? வேலை நிறுத்தமா?'' என்று வினமேல் வினவாகக் கேட் டேன்.

''ஏன் அவ்வளவு ஐயம்'' என்ருர் குழலியார்.

''இல்லை நான் பார்த்தபோது ஆமைபோல் அடங்கிக் கிடந்து இதுவே வாழ்வு என்று நினைத்தவர்

களா வேலை நிறுத்தம் செய்தனர். சரி சரி" என்று மகிழ்ந்தேன்.

இந்தக் கண்ணகி இல்லத்துக்கு வந்த பிறகு நாள்தோறும் நாளிதழ்களும் நூல்களும் படித்துப் படித்து நான் உலகத்துச் செய்திகள் பலவற்றைத் தெரிந்துகொண்டிருந்தேன். அந்த நாடுகளைப்போல் இங்கும் தொழிலாளர் புரட்சி செய்கின்றனர் எனின் இனி புது வாழ்வு மலரத்தானே வேண்டும் என எண்ணினேன்.

"ஊம். அவர்களா செய்கின்றனர். யாரோ இந்தப் பட்டினத்து ஆள் தானும். நிறையப் பணம் உடையவராம் அவர் முயற்சியால் நடக்கின்றது" என்றார் அப்பா.

"அதில் அவருக்கென்னவந்தது?" என்று கேட்டாள் அம்மா.

"எனக்கென்ன தெரியும்? வயலில் அறுக்கப் பதமான கதிர்கள் அறுக்கப்படாமல் நெல்எல்லாம்கொட்டி முளைத்துப் போவதுதான் எனக்குத் தெரியும்" என்று அலுத்துக்கொண்டார்.

நெல் பாழாகிறது என்றதும் என் மனம் வருந்தியது. தொழிலாளர் புரட்சியினால் நன்மை விளையும் என்றாலும் இதுபோல் அழிவும் இருக்கிறதே என்று எண்ணினேன். ஆனால் இந்த அழிவு எல்லாம் சிறு சிறு அழிவுகள். முதலில்மட்டும் நேர்வன. பிறகு எல்லாம் சரியாகப் போகும் என அமைதிகொண்டேன்.

"ஒன்று வேலை நிறுத்தம் செய்தவர்கள் பக்கத்து ஊரில் செய்ததைப் போலாவது செய்திருக்கலாம்" என்றார் அப்பா.

"என்ன செய்தார்கள்?" என்றார் குழலியார்.

தொழிலாளர் அனைவரும் கூடிக் கதிர் அறுத்து அடித்து நெல்லாக்கி ஊர்ப் பொது இடத்தில் வைத்து மூடிக் காவலும் இட்டார்கள். தகராறு தீர்ந்த பின் நெல் உரியவர்களைச் சார்ந்தது. பாழாகவில்லை" என்றார் அப்பா.

"செய்யலாம். ஆனால் அதற்கு மிகவும் கட்டுப்பாடு தேவை" என்றார் குழலியார்.

"என்னப்பா தகராறு?" என்றேன் நான்.

"ஒன்றுமில்லை அம்மா. கூலித் தகராறுதான். இருதரப்பில் யாராவது ஒரு தரப்பார் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் நிலைமை சரிப்பட்டுப் போகும். இருதரப்பார்க்கும் ஊக்கம் தருபவர்கள் இதை வளர்க்கின்றனர்" என்றார் அப்பா.

"அவர்கள் கேட்கும் அந்தக் கூலி கொடுத்து விடுவதுதானே?" என்றேன் நான்.

"கொடுக்கலாம் அம்மா, நிறைய நிலம் இருக்கின்ற மெத்தை வீட்டார் கொடுக்கலாம், மங்களூர் வீட்டுக்காரர் கொடுக்கலாம், மிராசுதார் வீட்டுக்காரர் கொடுக்கலாம், ஊரில் இப்படி நான்கைந்துபேரால்கொடுக்க இயலுமே தவிர மற்றவர்கள் எங்கே போவார்கள்?" என்றார் அப்பா.

"உங்கள் ஊரில் மொத்தம் எத்துணை ஏகர்" என்று கேட்டார் குழலியார்.

"சரியாக நினைவு இல்லை அம்மா, 400-ஏக்கருக்கு கொஞ்சம் குறைவு.

"எத்துணைபேர் அந்த நிலத்தின் உரிமையாளர்?"

"சுமார் அறுபது பேர்"

"400 ஏக்கருக்கு அறுபது பேரா?"

"ஆமாம் அம்மா"

"அப்படி ஆனால் சராசரி ஆறு ஏழு ஏக்கர்தான் ஒரு குடும்பத்திற்கு வரும்?"

"அதுவும் ஒரு சிலர்க்குத்தான் அம்மா, நான் முன்னே சொன்ன அந்த நான்கைந்து வீட்டுக்காரர்களுக்குத்தான் இருபது ஏக்கருக்கு மேல். மற்றவர்களுக்கு எல்லாம் ஏழு ஏக்கருக்கும் குறைவுதான்"

"நீர் வசதிகள் எப்படி?"

"வானம் பெய்தால்தான்"

"ஆயின் கொடுமைதான். நிலச்சுவான்தாரர்கள் என்றால் ஏழு எட்டு ஏக்கர் நிலம் உடையவர்களைச் சொல்லக்கூடாது. அங்கங்கே ஆயிரம் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் உடையவர்கள் இருக்கின்றார்கள். அவர்களிடத்தில்தான் முதலில்புரட்சியைத் தொடங்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு அரசாங்கத்தில் மிக்க செல்வாக்கு எந்த இயக்கத்தையும் தடை செய்துவிட முடியும்" என்றார் குழலியார்.

"நீங்கள் சொல்வதைக் கேட்டால் புரட்சி எப்போதும் நடக்க இயலாது என்று பொருள் படுகின்றதே?" என நான் இடை மறித்தேன்.

"நான் எப்போதும் இயலாதுஎன்று சொல்லவில்லை; சொல்லவும் விரும்பமாட்டேன். ஆனால் என்னைக் கேட்டால் கூலி உயர்வுக்காகச் செய்யும் இந்தப் போராட்டம் அவ்வளவு முக்கியமல்ல என்று சொல்வேன்" என்றார்.

"ஏன்?" என்றேன்.

"நன்றாக நினைந்து பார். கூலி உயர்வு மட்டுமா தொழிலாளர்க்குத் தேவை? முதலில் அவர்களைத் தனியாகப் பிரித்துவைத்து ஒதுக்கி இருப்பது கொடுமை. சேர்ந்து வாழும் இடம் சேரி என்று பொருள்படும். பார்ப்பனச்சேரி என்றெல்லாம் முன்பு இலக்கியங்களில் வழக்கு இருந்து வந்திருக்கின்றது. ஆனால் இன்றோ சேரி என்றாலே தொடப்படாதவர்களும் தீண்டக் கூடாதவர்களும் வாழும் இடம் என ஒதுக்கித் தள்ளுகின்றனர். தீண்டாமை கொடுமை என்றும், அதற்குத் தண்டனை உண்டு என்றும் சட்டம் பேசுகின்றது. ஆனால் பல சட்டங்கள் பேசற்று முடங்கிச் செயலற்றுப் போனதைப் போலத்தான் இதுவும் ஆகிவிட்டது இன்னும் கிராமங்களில் குளத்தில் சேரியார்க்கு என்று ஒரு துறையும் மற்றவர்க்கு என்று வேறு துறையும் நீர் முகக்க ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சேரி மக்கள் எவ்வளவு கற்றாலும், எத்துணைபெரிய பணக்காரராயினும் அவர்களுடைய உதவி தேவைப்படுகின்றவரைதான் எட்டி நின்று மதிப்பர். பிறகோ இழிகுலம் எனப் பேசுவர். ஏழைகள் எங்கும்இருக்கின்றனர். உயர்ந்தசாதி என்று எண்ணிக்கிடக்கும் மக்களிடம் ஏழ்மை இருந்தாலும் பிறப்பால் உயர்வு என்ற பொய்ச் செருக்கு போலி எண்ணம் இருக்கின்றன. முதலில் அந்தச் செருக்கைப் போக்கி 'மக்கள் நிகர்' என்று உணர்த்தினால்தான் பொருளாதாரப் போராட்டத்தின் வெற்றியை அனுபவிக்க முடியும். முதலில் இந்தக் கொடுமை தொலையவேண்டும். பிறகுதான் பொருளாதாரப் போராட்டம். அதுவும் பெயரளவில் நிலச்சுவான்தாரர் என்று வாழும் உங்கள் ஊர்களில் இல்லாமல் பெரிய இடங்களில் தொடங்கப்பெறவேண்டும். பெரியவர்கள் பணிந்துவிட்டால் சிறு நிலம் படைத்தவர்கள் தானாகச் சீர்திருத்தம் பேசுவார்கள்" என்றார்.

அவர் கூறியவை நினைந்து அவர் அறிவாற்றலையும் தெளிவையும் போற்றினேன். எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. நான் சிறு வகுப்புக்களில் படிக்கின்றபோது இரண்டு பக்கத்துச் சுவர்களிலும் ஆணி அடித்து, அந்த ஆணிகளில், வண்டிகளில் மூட்டைகளைப் பிணைத்துக் கட்டுவது போன்ற பெரிய கயிறு கொண்டு எங்கள் ஊர் பள்ளிக்கூடத்தையே இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கட்டி இருந்தனர். தோட்டத்துப்

பக்கத்துப் பகுதியில் இருந்த பகுதியில் சேரி வாழ் பிள்ளைகளையும் தெருப் பக்கத்துப் பகுதியில் மற்றவர்களையும் உட்கார வைப்பார்கள். அந்த நிலையை எண்ணி வருந்தினேன். இன்று அந்த நிலை எவ்வளவோ மாறிவிட்டது என்றாலும் சேரி மக்களுடன் சேர்ந்து பழகும் வாய்ப்பு இல்லைதான் என உணர்ந்தேன்.

"மெய்தான் அம்மா" என்றேன்.

"அறுவடையே ஆகாதா?" என்று கேட்டாள் அம்மா.

"ஒன்றும் தெரியவில்லை. என்னமோ ஊரில் பேசிக்கொண்டார்கள். பூவிருந்தவல்லி வக்கீலிடம் சொல்லி போலீஸ் கொண்டுவர முயற்சிக்கின்றார்களாம். முடிந்தால் வெளியூரில் இருந்து ஆட்களை வரவழைப்பது என்றும் இல்லாவிட்டால் நிலத்துச் சொந்தக்காரர்களே அறுவடை செய்வது என்றும் முடிவு செய்திருக்கிறார்கள் போல் தோன்றுகின்றது." என்றார்.

ஏதோ அவர்கள் தாங்களே அறுவடை செய்வதைப் பெரிய செயலாக எண்ணுகின்றார்கள் என்பதில் வருத்தம் பிறந்தாலும் இதுநாள் வரை குடை நிழலில் நின்று கொத்தடிமை வேலை செய்வதைக்கண்டு பழக்கமானவர்கள் வேலை செய்யத் தொடங்குகின்றார்கள் என்பதில் மகிழ்ந்தேன். ஊரில் யாரும் பெரிய பணக்காரர் இல்லை என்றாலும் எல்லோரும் உழைப்பை அவ்வளவு தூரம் ஒதுக்கிவிட்டனர். அந்த உழைப்பின் உயர்வை உணர்த்தவாது இந்த வேலை நிறுத்தம் பயன் தரட்டும் என எண்ணினேன்.

இந்த நிலையில் ஊர்தரும் காட்சியைக் காண மனம் விழைந்தது. அடுத்த வாரம் வரை பொறு என அதற்கு ஆறுதல் கூறினேன்.

தூரல் இரண்டொன்று விழவே எழுந்து விட்டோம் வேலை நிறுத்தத்தைப்பற்றி எவ்வளவோ அறிந்து கொள்ளத் துடித்தேன். ஆனால் அன்றைய பேச்சு அதோடு முடிந்தது.

இதை எல்லாம் கேட்ட அம்மா ஒன்றும் பேசத் தோன்றாதவளாகி "என்னமோ காலம் கெட்டுவிட்டது" என்ற பல்லவியைப் பாடியபடியே எழுந்து படுக்கப்போனாள்.

அதைக்கேட்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

(தொடரும்)

# வயோதிக வாலிபர் வாழ்க!

அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் தலைவரும், தமிழ்நாடு தொழிற்சங்கக் காங்கிரசின் தலைவருமான நமது தலைவர் வி. சக்கரைச் செட்டியாரவர்கள். இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் பழம்பெரும் தாத்தா ஆவார்.

40 ஆண்டுகளுக்கு முன் நமது நாட்டில் தொழிற்சங்க இயக்கம் தோன்றிய காலத்தை சக்கரைச் செட்டியாரின் பெயரோடு நினைத்துப் பார்க்கவேண்டும். 1918-ல் தோழர் வாடியா, தமிழ்ப் பெரியார் திரு. வி. க., தோழர் சிங்காரவேலு ஆகியவர்களோடு இணைந்து நின்று, மதராஸ் லேபர் யூனியன் கண்டதையும், அதன் உரிமைக்காகப் போராடியதையும், சென்னை முனிசிபல் தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், பெரம்பூர் இரயில்வே தொழிலாளர் சங்கம் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்ததையும் நினைத்துப் பார்க்கவேண்டும். அப்பால் 1924-ல் நடந்த அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரசில் பங்கு பூண்டு தொழிற்சங்கச் சட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று பிரரேபித்ததையும் நினைத்துப் பார்க்க வேண்டும அப்பொழுது, சக்கரைப் பெரியாரின் தீர்க்க தரிசனமும், தொழிலாளர் இயக்க ஊழியமும் சிறப்பும் ஒவ்வொரு தமிழ்த் தொழிலாளியையும் பெருமிதப்படச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

இந்தியர் இடம்பெறாத விட்லிக் கமிஷனை தலைவர் சக்கரை பகிஷ்கரித்ததும் மேயராயிருந்த காலத்தில் மோட்டார் போக்குவரத்து வேலை நிறுத்தத்தின் போது கமிட்டி நிறுவி மேயர் நிதியாக 30000 ரூபாய் திரட்டி, தொழிலாளர்களுக்கு உதவியதும் சகல தொழிலாளி மக்களின் உள்ளத்திலும் என்றும் பசுமையாய் இலங்கும்.

தொழிற் சங்கத் தலைவராகிய சக்கரை, 1917-ல் பெசண்டம்மையாரின் 'ஹோம்ரூல்லீக்' (குடியாட்சிக் கழகம்)கில் சேர்ந்து பணியாற்றியது, 1918ல் இங்கிலாந்து சென்று, பாராளுமன்ற விசாரணைக் குழுவின் முன் இந்திய சுதந்திரத்திற்காக வாதாடியது, 1928-ல் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் பங்குகொண்டது 1930–32 சட்ட மறுப்புக் காலங்களில் பிரிட்டிஷார் அடக்கு முறையைக் கண்டிக்க பிரஜா உரிமைச் சங்கததில் ஈடுபட்டு உழைத்தது, இரண்டாவது யுத்தத்தின் விளைவாக மலேயாவிலிருந்து இந்தியா வந்த அகதிகளுக்கு அகதிகள் நிவாரணக் குழுத் தலைவராக இருந்து பணிபுரிந்தது, சமாதான இயக்கத்தில் பெருமை தரும் பங்கை வகித்து வந்தது—ஆகியவற்றை எந்தக் கட்சிக்காரனும் எந்த தேச பக்தனும் மறக்கமுடியாது.

இத்தகைய பழம்பெரும் தேச பக்தரின், கட்சி கடந்த தமிழ்ப் பெரியாரின் முதுபெரும் தொழிலாளர் தலைவரின் 75-வது ஆண்டு நிறைவு வருகிற டிசம்பர் 12-ம் நாள் [12—12—56] வருகிறது.

இந்த நன்னாளை, கட்சி பேதம் பாராட்டாது தமிழ்ப் பொது மக்களும், சங்க பேதம் பாராட்டாது தொழிலாளிப் பெருமக்களும் சிறந்த முறையில் கொண்டாட வேண்டுமென்று தமிழ்நாடு தொழிற்சங்கக் காங்கிரஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

சென்னையிலுள்ள பல தொழிற் சங்கங்கள், அன்று தலைவர் சக்கரைக்கு ஒரு பணமுடிப்பு அளிப்பதென்று முன்வந்துள்ளன.

தமிழகத் தொழிற் சங்கங்கள் —எந்தக் கொடியின் கீழ் இயங்கினும்—எந்தக் கட்சியோடு இணைந்து நிற்பினும் முதுபெரும் தமிழ்ப் புதல்வரான சக்கரை நிதிக்கு மனமுவந்து பொருள் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகிறோம்.

—தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ்.

# அலைகள்

வானளாவும் தருக்கள், சிந்து பாடிக்கொண்டோடும் சிற்றருவிகள், உள்ளத்தை அள்ளும் உன்னதப் பூங்காற்று, எழிலகம் இதனினும் உண்டோ என்று உவகையெழச் செய்யும் உயர் திரு இடமாம குற்றாலத்தின் குளிர் நிறைக் காட்சிகளைக் கண்ட, கொல்லம் கல்லூரிப் பேராசிரியர் மாதவராவ் என்பார் மனம் வியந்து பேசுகிறார், எவ்வளவு சிறப்பான இடம்! உல்லாசங் கொழிக்கும் உத்யான வனமன்றோ இது! கேரளத்திலிருக்கும் எமக்கும் தமிழகத்துக்கும்—ஏன்? உலகத்துக்கே அரிய பெரிய உண்மைகளை அளிக்குமே, இக்குற்றாலம், என்பதாக. பேராசிரியர், தாவர நூல்களிலே கிடந்துழல்பவர் ஆதலால், குற்றாலத்திலே கண்ட ஒவ்வொரு செடியும் கொடியும் அவரைக் கவர்ந்திருக்கிறது. செடிகொடிகள், மரங்கள் முதலியவைகளைக்கொண்டு அரிய பெரிய ஆராய்ச்சிகளை நடத்தலாம்—மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும், குற்றாலம், ஒரு குளிர்ச் சோலை மட்டுமல்ல! ஆராய்ச்சிக் கூடம்!—என்று அறிவிக்கிறார். பேராசிரியர் காணக் கிடைத்த இடம், குற்றாலம். ஆனால் அது போல ஆராய்ச்சிக் குரிய அரிய பெரிய தருக்களும், தாவரங்களும், மேற்குத் தொடர்ச்சி மலையின் பல பாகங்களிலும் ஏராளம் உண்டு. நீலகிரியில் கிடைக்கும் யூகலிப்டஸ் மரம், எவ்வளவோ பயனும் பணமும் தரத்தக்கது என்பதை அறிவோம் நாம்! அந்த மரத்திலிருந்து அருமையான அட்டைக் காகிதம் உற்பத்திச் செய்ய முடியும், என இதோ சேதி கிடைக்கிறது. மரம் இருப்பது நீலகிரியில்! சேதி எங்கிருந்து கிடைக்கிறது தெரியுமா? உத்தரபிரதேசத்திலிருக்கும் டேராடூனிலிருந்து!!

நீலகிரிப் பகுதியிலிருக்கும் காட்டு இலாகாவினர் மரத்துண்டுகளை வெட்டியெடுத்து டேராடூனுக்கு அனுப்ப, அங்கிருக்கும் ஆராய்ச்சியாளர்கள் அந்த மரக் கட்டைகளைப் பரீட்சித்து, ஆராய்ந்து, சேதி அனுப்புகிறார்கள் இங்கு.

பேராசிரியர் பேருண்மைகளைக் கூறும் தருக்கள் உள்ளனவே, என்று செயல்மறந்து வியந்துரைக்கிறார். குற்றாலத்தை மட்டும் கண்டுவிட்டு! அழகுற வளர்ந்து நிற்கும் அகிலையும் தேக்கையும், தேவதாருவையும் புன்னையையும் ஆராய்ச்சி செய்து ஆவன செய்யவேண்டிய கூடமோ—இங்கு இல்லை — வடக்கே டேராடூனிலிருக்கிறது!!

இந்த ஆராய்ச்சி நிலையம், வெள்ளையன் காலத்திலிருந்தே வடக்கே உள்ளதுபோலும் என்று எண்ணத் தோன்றும். உண்மையில், காங்கிரசார் ஆளவந்த பின்னரும், தெற்கேயுள்ள கூனூரில் தானிருந்தது.

பிறகு டில்லி, டேராடூனுக்குக் கொண்டு சென்றது! அங்குள்ள பெரிய கூடமே, இந்த ஆராய்ச்சிகளை நடத்தும், இங்கே ஒன்று தேவையில்லை என்பதாக விளக்கமும் அளித்தது. காட்டிலாகா ஆராய்ச்சிக்கூடம் இங்கேயேயிருக்க வேண்டுமெனச் சொல்லி, நாம் மட்டுமல்ல, இந்துவும் மெயிலும்கூட எழுதின! பயன்? இங்கிருந்து மரத்தை வெட்டியனுப்பி, உண்டா இல்லையா என்கிற ஆராய்ச்சியை அறிய வேண்டிய நிலையிலுள்ளோம் நாம்! மலரிங்கே—மணம் அங்கே என்று 'பாமா விஜயம்' நாடகத்தில் பாடுவது போல, மரம் இங்கே—ஆராய்ச்சியோ அங்கே என்று நாமும் பாட வேண்டிய நிலை. பேராசிரியரோ, பெருமைப்படுகிறார், ஆராய வேண்டிய இடம் இதோவெனச் சொல்லி! நிலைமையோ நெஞ்சைக் குடைகிறது!

*

மலைவளம் மட்டுமல்ல நமது மண்ணிலிருப்பது; தோண்டினால் தென்படக்கூடிய சுரங்க வளமும் உண்டென்பதை அறிவோம். சில திங்களுக்கு முன்பு டில்லியார் கொண்டுவந்த ரஷிய நிபுணர்களும் இதனைச் சொல்லிப் போயிருக்கிறார்கள். காவிரிக் கரையின சில பகுதிகளிலே எண்ணெய் கிடைக்கிறதென்று! அதைக்கொண்டு கார் ஓட்டவும், இந்திரங்களை இயக்கவும் செய்யலாம் நாம்!

ரஷிய அறிஞர்கள் நடாத்திய ஆராய்ச்சியின் விளைவாக மேற்கொண்டு காரியங்களைச் செய்ய இம்மாதம், 26-ரஷியப் பேரறிஞர்கள் வரப்போகிறார்கள். எண்ணெய் எடுப்பதில் கைதேர்ந்த நிபுணர்களாம் இவர்கள். இவர்தம் முயற்சிக்காகவும் எங்கெங்கு எண்ணெய் கிடைக்குமோ அங்கெல்லாம தோண்டிப் பார்ப்பதற்காகவும், இந்திய சர்க்கார் **31-கோடி** ரூபாய் செலவிடுவதென முடிவு செய்திருக்கிறதாம்! இலட்சம் பத்து லட்சமல்ல, முப்பத்தோரு கோடி ரூபாய்!

இந்தப் பெரு முயற்சியிலீடுபடப் போகும் ஆராய்ச்சிக்கூடம் எங்கே இருக்கிறது தெரியுமா? கிழக்குப்

## பெயரணிதல்

**பம்பாய், தாராவி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தோழர் சுப. குமார்—செல்வம் அவர்களது பெண் மகவுக்கு 18—11—56ல் "தமிழரசி" எனப் பெயரிடப்பட்டது.**

பஞ்சாப்பில்!! காவிரிக் கரையில் எண்ணெய்—ஆராய்ச்சிக்கூடமோ பஞ்சாபில். எண்ணெய் வெட்டி எடுப்பதற்குள், இவர்கள் ஆய்வுக் கூடத்துக்கு அனுப்பி உண்மை அறிவதற்குள், எனனென்ன உண்டாகுமோ, யாமறியோம்! தமிழகத்தில் எண்ணெய் வளம் இல்லை என்ளுெரு முடிவுவரினும், வரக்கூடும்!! வடவரின் சூதுமதியின் முன் யாரே என்ன செய்யமுடியும்? லகான் நம்மிடமில்லையே, வண்டியைச் சரியாக ஓட்ட!!

*

இதோ, மற்ளுெரு தகவல்—மதிப்புக் குரிய டில்லி மந்திரியாரே தருகிருர். ஒரு கோடி ரூபாய் கிடைக்கப் போகிறது! ரஷியாவுக்கு, இந்திய துணைகண்டத்திலிருந்து இவ்வளவு ரூபாய்க்கும் செருப்புக்ள் வாங்கி அனுப்பப்படப் போகின்றன!!

"சர்க்கார்தானே செய்யப்போகிறது? அப்படியாளுல் இந்தியத் துணைகண்டத்தின் ஒவ்வொரு பாகத்திலும் எங்கெங்கு செருப்புத் தொழில்களுள்ளதோ அவைகளிலிருந்தெல்லாம் வாங்கியே அனுப்புவார்கள். மொத்தமாகக் கிடைக்கும் வருமானத்தை ஒரு ஊருக்கு மட்டும் கிடைக்கும்படிச் செய்வது நல்லதல்லவே?", என்றுதான் எண்ணத்தோன்றும் எவருக்கும். அப்படியெல்லாம் ஆசைப்படாதீர்கள் என்று அறிவிக்கிருர் டில்லி வியாபார மந்திரி கர்மார்கர்.

வரப்போகும் ஒரு கோடி ரூபாயும் ஆக்ராவுக்குப் போகப் போகிறதாம்! அங்கு தயாரிக்கப்படும் செருப்புகள் மட்டுமே ரஷ்யாவுக்கு வாங்கி அனுப்பப்பட போகின்றனவாம்!!

"அக்கிரமம்—அநீதி—ஏனிந்தச் சலுகை—இது நியாயமா", என்று பார்லிமெண்டில் பலர் கேட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு, வழக்கம் போல, ஐக்கிய போதனை, மிக அருமையாகச் செய்யப்பட்டிருக்கிறது. கர்மார்கர் பதிலளித்திருக்கிருர், "இப்படியெல்லாம் பிரித்துப் பேசாதீர்கள். ஆக்ராவில்தான் அதிகமாகச் செருப்புத் தொழில் நடக்கிறது. அதுதான் காரணமே ஒழிய வேறல்ல," என்பதாக. செருப்புத்தொழில், ஆக்ராவில் மட்டும் சிறப்பாக நடக்கிறதாம்! சேலம், திண்டுக்கல்—மாயவரம்... என்று நாம் பெருமை பேசுகிருேம்; டில்லிக்கோ, ஆக்ரா மட்டுமே கண்முன் தெரிகிறது.

தோல் பதனிடும் தொழிலே இல்லாத இடமல்ல தெற்கு! சொல்லப்போளுல் இந்தியஉபகண்டத்திலேயே அமெரிக்காவக்கும் இன்னபிற இடங்களுக்கும் தோல் ஏற்றுமதி செய்வோரே நாம்தான். இத்தொழிலை நம்பி, பம்பாயிலுள்ள தாராவி போன்ற இடங்களில் ஏராளமான வியாபாரிகளும் தொழிலாளர்களும் போய்க் குவிந்துகிடக்கின்றனர். நெல்லை போன்ற மாவட்டங்களிலிருந்து சென்றவர்கள் இவர்கள். தோலைச் சுரண்டுவதும், அதனை விலைப்போகச் செய்வதுமே இவர்கள் தொழில்! தோல் பதனிடுவதிலும், பதனிட்ட தோலைக் கொண்டு பல பொருள்களைச் செய்வதிலும் வல்லவர்கள் இங்கே ஏராளம். எனினும், ஒரு கோடியில் சிறு துளிகூட நமக்கு இல்லை! ஆக்ரா அனுபவிக்கப் போகிறது!!

*

ஆக்ராவிலுள்ள தொழிலாளருக்கும் வியாபாரிகளுக்கும் அந்நிய நாட்டு வியாபாரத்தின் மூலம் ஒரு கோடி ரூபாய் வாங்கித்தரப் போகிறது, டில்லி. அதே சமயத்தில், தெற்கேயுள்ள கேரளத்தில் 45000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் அலைகிருர்கள்! தகவலையும், அதே வியாபார மந்திரி டில்லிச் சபையில் வெளியிட்டுள்ளார். ஒருவர் இருவரல்ல, 45000 பேர்!!

இவர்கள் ஈடுபட்டிருப்பது முந்திரித் தொழிலிலாகும். இந்திய துணைகண்டத்திலேயே, போட்டியில்லாத தொழில் இது; ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்குச் செல்லும் முந்திரியெல்லாம் இங்கிருந்து போகிறது. முந்திரிப் பருப்புக்கு, வெளிநாடுகளில் மிக்க கிராக்கியுண்டு! இருந்தும், தொழிலாளர்கள், வேலையில்லாமல் வீதிகளில் அலைகிருர்கள். முதலாளிகளைக் காரணம் கேட்டாலோ, தொழில் சரியாக நடைபெறவில்லை — சரக்கு செலவாணியாக சர்க்கார் வழிசெய்து தந்தால் தானே, என்கின்றனர். சர்க்காருககோ, ஆக்ரா, கண்முன் தெரிகிறது! அல்லாடும் கேரளத்திலோ 45000-பேர் அலைகிருர்கள்!!

★

கல்கத்தா விஞ்ஞானக் கழக ஏடான "தி சயன்ஸ் கிளப் ஜர்னல்" பின்வருமாறு எழுதுகிறது:-

"இந்திக்கு, ஒரு உறுதியான உருவம் இல்லை. எனவே விஞ்ஞானக் கலையை எடுத்துக் கூறுவதற்கான தகுதி அதற்கில்லை. எந்த விஞ்ஞானியின் வார்த்தையும், கணக்காகவும் தெளிவாகவும் சொல்லவேண்டும் அவர்கள் கருத்தை எளிதாக விளக்கும் வகையிலிருக்கவேண்டும். ஆதலால், வளர்சசியில்லாத ஒரு மொழியில் விஞ்ஞானி அறிக்கை வெளியிட முடியாது. நவீன ஆங்கிலத்துக்கு வெகு தொலைவில் இருக்கிறது இந்தி. உபயோகமான கலைச் சொற்களை இந்தியில் கண்டுபிடிக்க எத்தனையோ ஆண்டுகளாகும்"

*

டில்லியில் அண்மையில் நல்ல நூல்களுக்குப் பரிசளிப்பு விழா நடைபெற்றதல்லவா? அது போது கல்கி தீட்டிய 'அலை ஓசை' எனும் நாவலுக்கான ரூபாய் ஐயாயிரம் பரிசை, துணைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணனிடமிருந்து கல்கியின் மைந்தர் பெற்றுக்கொண்டாராம். அந்தச் சந்தர்ப்பத்தின் போது புத்தகத்தின் பெயரை, "ஆலை ஓசை" என்று படித்தார்களாம். பரிசளித்த தாமிரப் பட்டயத்திலும் "ஆலை ஓசை" என்ற பெயரையே இந்தியில் பொறிந்திருந்தார்கள் என்று 'சிவாஜி' எனும் தேசிய ஏடு சோகத்துடன் கூறுகிறது.

# 'டிமாண்ட்' அதிகமாகிறது!!

வர வர 'டிமாண்ட்' அதிகமாகிறதாம்! போலீஸ் ரோந்து, லாரிகள் பவனி, வழக்குகள் தண்டனை, இத்தனையிருந்தும் வரவர அதிகமாகிக் கொண்டே போகிறதாம்!!

என்ன செய்வோம்? பட்டினத்தில், ஏகக்கிராக்கி! எங்கும் அமோகமாக விற்பனையாகிறது! அதனால், யார்யாரெல்லாமோ 'உற்பத்தி' செய்யும் ஆசை கொண்டுவிட்டார்கள், அதனால் வரவர அதிகமாகிக் கொண்டே போகிறது—என்று செங்கற்பட்டு மாவட்ட கமிட்டியார் குரலெழுப்பியுள்ளார்கள், இக்கிழமை. கடந்த மூன்றுமாதகாலக் கணக்கை பார்க்கிறபோது, கவலை அதிகமாகிறதாம்— கைத்தொழில், வெகுவேகமாகவளர்ந்துகொண்டே போகிறதாம், கிராமப்புறங்களில். புறம்போக்கு திடல்கள், குளக்கரைபுள், ஆற்றுப்படுகைகள் எல்லாம் இப்போது சரக்குதயாரிக்கும்இடங்களாகிவிட்டனவாம். உற்பத்தி செய்யப்பட்டசரக்கு, மாயாவினோதமாக ஒரு இடத்திலிருந்து இன்னோரிடத்துக்குப் போகின்றதாம். சைக்கிள் டியுயூபுகளில் கட்டிக் கொண்டும், காய்கறிக் கூடைகள் மூலமாகவும், சாணிக் கூடைகளிலும், பால்டின்களிலும், மூட்டை முடிச்சுகள் மூலமாகவும் ஏற்றுமதி இறக்குமதி நடைபெற்று வருகிறதாம். இதுவும் கடந்த மூன்று மாதத்தில், மிக அதிகரித்துள்ளதாம்.

செங்கற்பட்டு கமிட்டியினர்மட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டத்திலும், மதுவிலக்கு இப்படித்தான இருந்து வருகிறது. சட்டமும், பாதுகாபபும், தண்டனையும் இருக்கின்றன. எனினும் மதுவிலக்கு, வரவர பயனற்றதாகி வருகிறது—ஒருபெரிய கைததொழிலாக உருவெடுத்து வருகிறது கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில். காரணம், கமிட்டியினர் கூறுவதுபோல, டிமாண்ட் அதிகமாகி வருகிறது!!

மதுவிலக்கு இல்லாத காலத்திலாவது கள்ளுக்கடைக்குள் நுழைவதையும், பிராந்திக்கடைக்குள் போவதையும், விஸ்கியும் பீரும் வழங்கும் உல்லாச ஓட்டலுக்குள் நுழைவதையும், ஒரு மானக்குறைவான காரியம்—தலையில் முக்காடு போட்டுக்கொண்டு போக வேண்டிய இடங்கள், நாலுபேருக்குத்தெரிந்தால் நம்மைப சபிப்பார்கள் என்கிற பயம் பொதுவாக இருந்து வந்தது. அப்போதும், இதைத்துச்சமென எண்ணிய குடிகாரன் இருக்கத்தானிருந்தான்! இப்போதும் குடித்துவிட்டு உளறுகிற அவன் இருக்கவே செய்கிறான்! ஆனால் அப்போதைவிட இப்போது இரகசியக் குடியர்கள், அதிகமாகியிருக்கிறார்கள்—பல பெரிய இடங்களில், அருமையாகக் கிடைக்கும் வைரம், தங்கத்துக்குள்ள 'மவுசு' பிராந்திக்கும் விஸ்கிக்கும் இப்போது ஏற்பட்டிருக்கிறது—இதனால், சட்டமூலம் தடுக்க நினைத்த மதுக்குடி, இரகசியமாகவும் புது நபர்களாலும் பெருகி வருகிறது இத்தன்மையினை அமைச்சரவையிலிருப்போரும், அதிகாரிகள் பலரும், நிச்சயம் மறுக்க முடியாது.

இந்தப் பிரச்னையை, ஆள்வோர் கூர்ந்து கவனித்தல் வேண்டும். சட்டமிருக்கிறது, வழக்குகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன அபராதமும் தண்டனையும்கூடத் தரப்படுகிறது—எனினும், ஓலம் எழும்புகிற நிலை! சாதாரண விஷயமல்ல.


கூட்டு அபராதம் விதிப்பது, ஒரு கிராமத்தையே தண்டிப்பது, கடுமையான சட்டம் இயற்றுவது, என்று பலப்பல யோசனைகள் அவ்வப்போது இடத்துக்குத்தக்க மாதிரியும் இஷ்டத்துக்கு ஏற்றவாறும், அமைச்சர்களால் கூறப்பட்டு வருகிறது-'ஆகட்டும், பார்க்கலாம்' என்று எதற்கும் காமராஜர்கூறுவாராமே, அதேபாணியில்.

உருவான யோசனை, யாருக்கும் விளங்கவுமில்லை! புரியவுமில்லை! டிமாண்டோ, அதிகமாகிக் கொண்டே போகிறது.

எனவே, அரசியலார் தக்கோர் மூலம் மதுவிலக்கு தீவிரமாக அமுல் நடத்துவதுபற்றி ஆராய்தல் வேண்டும். இதற்கென முன்பு ஒரு கமிட்டி நிறுவப்பட்டு, அது பல யோசனைகள் கூறியிருந்தது. அந்த யோசனைகளில் பெரும்பாலும், கடுமையான தண்டனை விதித்தால் போதும் என்றே வலியுறுத்தப்பட்டிருந்தது! அது மட்டும், சிக்கலைப் போக்கிவிடும் என்று கருதுவதற்கில்லை ஆகவே இந்தச் சமூகச் சனியனை பென்னியைப் பிடித்து அமுக்கும் ஒரு நல்ல வழி கண்டுபிடிக்கப்பட வேண்டும்—அதற்கான வழிகளை ஆள்வோர் ஆய்ந்தறிய முயலுதல் வேண்டும். ★

---

'பயிரிடப்பட்டதெல்லாம் பழாகிறதே என்ன செய்யலாம்?' என்று யோசித்தனர் விவசாய இலாகாவினர். பழாகக் காரணம் குரங்குகள் என்று கண்டு அவைகளை அப்புறப்படுத்த வழியென்ன வென்று ஆலோசித்து நடவடிக்கையும் எடுத்தனர். அது, ஒரு பெரிய பிரச்னையாகிவிட்டது, பக்தர் குழாத்தில்! 'குரங்கா? அது, அனுமன் கூட்டமாச்சே.' 'அனுமாரையா ஊரைவிட்டு ஓட்டுவது' என்று எதிர்ப்புகள் கிளமபி, பெரிய தோர் தொல்லையாக உருவெடுத்துவிட்டதாம், வடக்கே உள்ள கான்பூரில். பயிரோ பாழாகிறது! பக்தர்களோ சண்டைக்கு வருகிறார்கள்! என்ன செய்வது என்று விழித்த விவசாய இலாகாவினர், கடைசியில் பயிர் பாழானாலும கவலையில்லை, பக்தர்கள் எதிர்ப்பு வேண்டாம் என்று கருதி, குரங்குகளை அகற்றும் யோசனையை ஒத்திப்போட்டிருக்கின்றனர்-இந்தக்கிழமை.




மலர்ந்திருந்த மலர் ஒன்று கூம்பி பின்னர் திரும்ப அது மலரும் நிலை ஏற்படுவதையே மறுமலர்ச்சி, எனக் கூறுவர். மக்களின் வாழ்க்கையில், கல்வியில், பண்பாட்டில், எண்ணத்தில், எழுத்தில், பேச்சில் எல்லாம்மறுமலர்ச்சி ஏற்பட்டால்தான் ஒரு சமுதாயம் வாழமுடியும்ஒருகாலத்தில்நாகரிகச்சுடரைக் கரத்திலேந்தி பாரெங்கும் தனது புகழைப் பரப்பிய தமிழன், இன்று தன் அரசிழந்து, தன் மொழி இழந்து, நடுத்தெரு நாராயணனாக, நாயிலும் கடையனாக நிற்பதேன்? வந்தோரை வாழ்த்தி வரவேற்று வாழ்வளித்த தமிழன் இன்று ஏமாந்தவனாக ஏங்கி நிற்பதேன் என்பனபோன்ற கேள்விகளை நாம் எழுப்பிப் பார்ப்போமேயானால் தமிழரிடையே ஒற்றுமை உணர்ச்சி இல்லாததுதான் காரணம் என்பது தெளிவாகப் புலப்படும்.

ஒரு கரத்தில் குறளும், மறுகரத்தில் வீரவாளும், ஏந்தி ஏறுநடை போட்ட தமிழனின் முன்னேற்றப் பாதையிலே ஒரு குரல் குறுக்கிட்டது, மேலே செல்லாதே, மறுபுறம் திரும்பு என்ற அக்குரலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தனது திசையை மாற்றினான் தமிழன். சற்று நேரத்தில் உன் கரத்திலிருப்பது குறளா, அதனைத் தூர வீசு என்று அக்குரல் கட்டளையிட்டது. குறளைத் தூர வீசினான். தமிழரின் குரல்வளை அக்காலத்திலிருந்து நெரிபடத் தொடங்கியது.

ஏன்? எப்படி என்பன போன்ற கேள்விகளைக் கேட்க ஆரம்பித்த பின்னரே மறுமலர்ச்சி நிழலிடத் தொடங்கியது. ஒரு நாள் காலை இங்கிலாந்து நாட்டிலே ஒரு சிந்தனையாளன் தான்கண்ட முடிவுகளை மக்களுக்குக் கூறினான். நான் மாதாகோவிலினுட் சென்று பார்க்கிறேன், அங்கு பைபிள் இலத்தின் மொழியிலே வாசிக்கப்படுகிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இங்கிலாந்து மக்களுக்குப் புரியக் கூடிய விதத்தில் பைபிள் ஆங்கில மொழியிலே மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று கூறினான் அவன். இவ்விதம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டால்தான்'

> சென்ற திங்கள் தோழர் நாஞ்சில் கி. மனோகரன் இலங்கை சென்றிருந்தார்; அங்கு பல மன்றங்களில் அவர் சொற்பொழிவாற்றி திராவிட முன்னேற்றக் கழகம் பரப்பி வரும் பகுத்தறிவுக் கருத்துகளை விளக்கிக்காட்டி, இலங்கை வாழ் தமிழரிடையே ஓர் புத்துணர்ச்சி மலர்ந்திடச் செய்தார்.
>
> "மறுமலர்ச்சி'' எனும் தலைப்பில், தோழர் மனோகரன் அகில இலங்கை பகுத்தறிவு இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் நகர மண்டபத்தில் பேசினர்.
>
> அந்த சொற்பொழிவின் சாரம், இங்கு தரப்படுகிறது.

கர்த்தர் எந்த நோக்கத்துடன் பைபிளை ஆக்கினாரோ அந்த நோக்கம் நிறைவேறும் என்றான் அந்தச் சிந்தனைச் சிற்பியாகிய ஜோன் விக்கிளிப். அவனுக்கு மாதா கோவிலின் உச்சியிலிருந்து எதிர்ப் பறை கொட்டப்பட்டது. அதற்கெல்லாம் கலங்காத அந்தச் சிந்தனையாளன் பைபிளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்தான் அதனை மக்கள் படித்தனர். அதன் பயனாக அதுகாறும் ஏற்றுவந்த நிலை ஒவ்வாத கொள்கைகளை ஏற்க மறுத்தனர். இந்தமறுமலர்ச்சியின் முடிவில்தான் புரட்டஸ்தாந்து மதம் உருவாக முடிந்தது.

யாழ்ப்பாணப் பெருமக்கள்அறிவில் சிறந்தவர்கள். நான் வயதில்இளையவன். அதிகம் கற்றவனல்லன், கற்றிருந்தாலும் சரிவரக் கற்றிலேன். ஆதலால், நான் கூறும் ஒரு கருத்தை ஆர அமரச் சிந்தித்துப் பார்க்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கருத்து உங்களுக்குப் பிடித்தால் என்னை வாழ்த்திஆசி கூறுங்கள். அக்கருத்து உங்களுக்குப் பிடிக்காவிடில், நீங்கள் எந்தக் கருத்துடன் வந்தீர்களோ அந்தக் கருத்துடனே வந்தமாதிரியே சென்றுவிடுங்கள்.

ஆண்டவன் ஒருவன் உண்டு என்பதில் எவருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. மேலே பரந்து கிடக்கும் நீல வானத்தையும், ஒளிமின்னும் நட்சத்திரக் கூட்டங்களையும், தண்ணொளி வீசும் வெண்ணிலாவையும் உண்டாக்கியது யார்? வானுயர்ந்த வெற்புக்களையும், அதில் தவழும் வெண்ணிற மேகங்களையும், கீழே ஓங்கி வளர்ந்துள்ள அடவிகளையும் உண்டாக்கியது எவர் என்பது போன்ற கேள்விகளுக்குச் சிலர் பதில் கூறத் தயங்கி இருக்கிறார்கள். சிலர் இதுதான் பதில் என்று அறுதியிட்டுக் கூறியுமிருக்கிறார்கள். கடவுளின் தத்துவத்தைத் தாயுமானவரும், அவரைத் தொடர்ந்து சித்தர்களும், வித்தகர்களும் தெளிவாக்கி இருக்கிறார்கள். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பது எதுவோ அதுதான் ஆண்டவன் என்று அறுதியாகக் கூறினார் தாயு

# திராவிட நாடு

மலர் 15 | 9-12-56 | இதழ் 23


## கோலாரும் டில்லியும்!

தங்கம் கிடைக்கும் கோலார் வயல்கள் நவ 29-ம் தேதி முதல் மைசூர் அரசின் சொத்தாகிவிட்டது. கடந்த 75-ஆண்டுகளாக ஜான் டெய்லர் எனும் ஆங்கிலக் கம்பெனியின் ஆதிக்கத்திலிருந்த அவ் வயல்கள் மைசூர் அரசின் இடைவிடா முயற்சியால் தேசிய மயமாக்கப்பட்டுவிட்டது! பேரானந்தமும் குதூகலம் அடைய வேண்டிய மைசூர், பெருமூச்சுவிடுமாறு செய்யப்பட்டிருக்கிறது டில்லியால்! வெள்ளைக்கார கம்பெனிக்கு அதிக நஷ்ட ஈடு தருமாறு வற்புறுத்தியதாம் டில்லி. அதன் காரணமாக 164-இலட்சங்கள் தர நேர்ந்து, 29-ந்தேதியன்று 123-இலட்சங்கள் கொட்டியும் தந்தாயிற்று. இது ஏன்! டில்லிக்கு ஏனிந்த கெடுமதி!—என்று மைசூர் சபையில் கடுந்தாக்குதல் நடைபெற்றபோது அப்போதைய நிதியமைச்சர் சித்தவீரப்பா ஒரு உண்மையை வெளியிட்டார், "நாம் ஒரு சிறு தொகையையே நஷ்ட ஈடாகத் தந்தால் வெளிநாட்டு பணவுதவி தருபவர்களின் விரோதம் ஏற்படும் என்று டில்லி கருதிற்று. பிரிட்டன், அமெரிக்கா, உலக பாங்கி வட்டாரங்களில் ஒரு பரபரப்பு ஏற்படும். அதனால், அங்கிருந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு நாம் எதிர்பார்க்கும் பணம் வர இடையூறு ஏற்பட்டாலும் ஏற்படும். அவர்களுக்கெல்லாம், நம்பிக்கை ஏற்படவும், வெளிநாட்டு மூலதனத்துக்கு நஷ்டம் ஏற்படாது என்பதை எடுத்துக் காட்டவுமே அதிக தொகை கொடுக்கச் சொல்லிற்று" என்கிறார்.

இதுமட்டுமல்ல, சர்க்கார் உடமையான கோலார் வயல்களை நிர்வகிக்க மைசூர் முதலமைச்சர் தலைமையில் ஒருபோர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போர்டில் ஜான் டெய்லர் கம்பெனிக்கும் இடம் தருமாறு கட்டளையிட்டதாம் டில்லி! மைசூர் விரும்பவில்லை—எனினும் கட்டளைக்குக் கீழ்படிய நேர்ந்திருக்கிறது!! மைசூர் அரசின் முயற்சியை வாழ்த்துகிறோம்! அதே சமயத்தில், சோகத்துடனிருக்கும் மைசூருக்கு நமது அனுதாபத்தையும் தெரிவிக்கிறோம் — டில்லியின் தொடர்பு நீங்கினாலன்றி மானமும் பணமும் பறிபோகும் நிகழ்ச்சிகள் நடந்தவண்ணம்தான் இருக்கும்.

✶

முன் பக்கத் தொடர்ச்சி

மானர். முட்டாளே, கடவுள் அங்கிருக்கிறார், இங்கிருக்கிறார் என்று அலையாதே, இதுதான் கடவுளின் தத்துவம் என்று அவர் சொன்னார். அவர் கடவுள் நம்பிக்கையற்றவரோ என்றால் அல்ல. அவர் பழுத்த மதவாதியோ என்றால் ஆம். அவரைத் தொடர்ந்து இக்கருத்துக்கு வித்திட்டு வளர்த்தார்கள சித்தர்களும், வித்தகர்களும். கோவிலில் பூசையும், தீபாராதனைகளும், மாலை அலங்காரங்களும், அவசியமில்லாதன உள்ளத்திலேயே ஆண்டவன் இருக்கிறான் என்றார் நாஞ்சில் நாடு தந்த நற்றமிழ்க் கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை. அவரைப்போல் பாரதியாரும், பாரதிதாசனும் இதே கருத்தினைத்தான் தெரிவித்திருக்கிறார்கள். 'செத்த பின்னர் சிவலோகம் வைகுண்டம் சேர்ந்திடலாமென்றெண்ணி இருப்பர். (என்னை மன்னிக்க வேண்டும்) பித்த மனிதர் அவர் சொல்லும் சாத்திரம் (திரும்பவும் என்னை மன்னிக்க வேண்டும்) பேயுரையாமென்று ஊதடா சங்கே" என்றார் பாரதியார்.

வங்கம் தந்த கவிஞரான தாகூரின் கடவுள் தத்துவமும் மறுமலர்ச்சி பெற்றதாகவே மிளிர்கிறது. கடவுள் எங்கே இருக்கிறார் என்று ஒருவன் அவரை வினவினான். உன் கையிலிருக்கும் ஜெபமாலையை முதலில் வீசி எறிந்துவிட்டு வா கடவுள் எங்கிருக்கிறார் எனக் காட்டுகிறேன் என்றார் அவர். கேட்டவன் கையிலிருந்த ஜெபமாலையை வீசியெறிந்தான். பின்னர் கேட்டான் கடவுள் எங்கே என்று. இருளடைந்த ஆலயங்களின் மூலைகளில் போய் ஆண்டவனைத் தேடாதே. ஏழை உழைப்பாளியின் விவசாயின் கண்ணீர்த் துளிகள் எங்கெங்கெல்லாம் சிந்தியிருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் சென்று பார் கடவுளைக் காண்பாய் என்று கூறினார் அவர். இத்தனை புலவர்களது கருத்திலே கோளாறு இருக்கும் என்று என்னால் துளிகூட நம்பமுடியாது. எனவே, இது குறித்து யாராவது அன்பர்கள் ஆத்திரமடைந்தால் அவர்கள் ஆத்திரம் அந்தப் புலவர்களின்மீது திருப்பப்பட வேண்டுமேயன்றி, என்மீது திருப்பப்படக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்தில் ஒருவனை தலைமைக்காரனாகத் தேர்ந்தெடுத்து அவனிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க அவன் படிப்படியாக அரசனாக மாறிய காலமுதல் இன்று மலர்ந்துள்ள ஜனநாயக குடியரசாட்சி வரை அரசியலிலே ஏற்பட்ட மறுமலர்ச்சி ஏராளம் ஏராளம். கிராமத் தலைமைக்காரன் அரசனாக மாறினான். அரசர்கள் கோலாகல வாழ்வு வாழ்ந்தனர். மதுவையும் மங்கையையும் அரவணைத்தபடியே மதிமயக்கத்துடன் வாழ்வைக் கடத்தினார்கள். பிறை மதிக்கும், மங்கையின் நுதலுக்கும் உள்ள ஒப்புவமை ஆராய்ந்தார்கள். திராட்சைக் கனியைக் கையிலெடுத்து, அதன் சுவையிலும் பார்க்க உன் இதழ்கள் சுவையுடையன என்று கூறினார்கள். மங்கை சந்திரனைக் காட்டினாள். அந்தச் சந்திரனை ஏன் காட்டுகிறாய், சந்திரனை ஒத்த உன் முகத்தை என்னிடம் நீட்டு என்று கேட்டார்கள் அவர்கள். அந்த அரசியல் முறையிலே ஏற்பட்ட மறுமலர்ச்சிதான் இன்று குடியரசுத் தத்துவமாக மிளிர்கின்றது. பொருளாதாரத் துறையிலே ஏற்பட்ட மறுமலர்ச்சிதான் சோஸலிஸ, கம்யூனிஸ தத்துவமாக உருப்பெற்று இருக்கின்றது.

இதுவரை நான் பேசியதில், இங்குள்ள பெருமக்களின் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய விதத்தில் ஏதாவது சொற்களோ கருத்துக்களோ கலந்திருந்தால் வயதில் என் தந்தையை ஒத்த பெரியவர்களை நோக்கிக் கேட்கின்றேன், என்னை மன்னியுங்கள் என்று. என்னோடொத்த வயதுடையவர்களைக் கேட்கிறேன் சமாளியுங்கள் என்று. என்னிலும் குறைந்த வயதுடையவர்களைக் கேட்கிறேன் என்னை நம்புங்கள், நான் கூறிய கருத்துக்களை ஆராயுங்கள் என்று.

—"சுதந்திரன்"

✶

6-ம் பக்கத் தொடர்ச்சி

திருக்கிறது என்று அருவருப்புடன் பேசுவது போலத்தான் இன்று, பொதுமக்கள், காங்கிரசிடம் உள்ள பணபலம், பற்றி அருவருப்புடன் பேசுகிறார்கள்.

இந்தக் கருத்தைத எடுத்துக் காட்டவே நான் உனக்கு இந்த இருவேறு காட்சிகளைக் காட்டினேன்.

ஆபரணச் சுமைதாங்கியாக உள்ள கமலாம்பிகையின் மாளிகையில் வேலை செய்து பிழைக்கும் சிக்ப்பண்ணனே அல்லவா, அந்த மாது இருக்கும் அவலட்சணத்தை எடுத்துக்காட்டி அருவருப்பாகப் பேசுகிறான்—அதுபோன்றே காங்கிரஸ் கட்சியின் ஆட்சியினால் அவதிப்பட்டுவரும் மக்கள், அந்தக் கட்சியிடம் குவிந்துகிடக்கும் பணபலத்தைக் கண்டு அருவருப்புடன் தான் பேசுகிறார்கள். செல்லாயி விஷயத்தில் ஆதரவு காட்டிப் பேசுவது போலத்தான், பணபலமற்ற நமது கழகத்தைக் குறித்துப் பேசுகின்றனர்.

**ஊழல் மிகுந்த ஆட்சி. உதவாக்கரைத் திட்டமிடும் ஆட்சி. முதலாளிக்குச் 'சலாமிடும்' ஆட்சி. வெளிநாடுகளில் கடன்படும் ஆட்சி. அடக்குமுறை அவிழ்த்துவிடும் ஆட்சி.**

என்று அடுக்கடுக்காக, அருவருப்புடன் காங்கிரஸ் ஆட்சியின் அவலட்சணத்தை எடுத்துக்காட்டுகின்றனர்; எனினும் இறுதியில், ஒருபெருமூச்சுடன் இவ்வளவு அக்ரமம் செய்த ஆட்சிதான் என்றாலும், தேர்தலில் மக்களை வளையவைப்பதற்குத் தேவையான பணபலத்தை மலைபோலப் பெற்றிருக்கிறதே, பாபம், திராவிட முன்னேற்றக் கழகத்தார், ஓயாது உழைக்கிறார்கள், உள்ளன்புடன் பாடுபடுகிறார்கள், ஏச்சும் பேச்சும் இழிமொழியும் பழிச்சொல்லும் வீசப்படுகிற போதும் தாங்கிக்கொண்டு பணியாற்றுகிறார்கள், எனினும் தேர்தலில் ஈடுபடுவதற்குத் தேவையான பணபலம் இல்லையே—ஏராளமான செலவு இருக்கிறதே, எப்படிச் சமாளிக்க முடியும் என்றுதான் பேசிக்கொள்கிறார்கள். நமது கழகத்தோழர்களிடையேகூட இந்தப் பேச்சு எழக் கேட்டிருக்கிறேன்.

தம்பி! ஆண்டியப்பனைப் பார்த்தோமல்லவா! அதுபோலத்தான், நமக்குக் கையிலே போதுமான பணவசதி இல்லாதிருக்கலாம், ஆனால் நாம், பொதுமக்களிடம் ஆற்றிவரும் பணி வீண் போகப்போவதில்லை; அவர்களிடம் பணம் இல்லை, எனவே, செலவுக்கு அவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாகாது, நம்மாலானதையெல்லாம் நாம் செய்துதர வேண்டும் என்ற ஆர்வத்துடன், தூய தொண்டுக்கு துணைநிற்க வேண்டும் என்ற நல்ல மனம்படைத்தோரெல்லாம் முன்வரத்தான் செய்வார்கள்.

தம்பி! அரசியலில். அதிலும் தேர்தல்கால அரசியலில், பணத்துக்கு இருக்கிற செல்வாக்கையும் கண்டிருக்கிறேன்; பணபலத்தையும் சுக்குநூறாக்கக்கூடிய மக்கள் சக்தி வீறுகொண்டெழுந்ததையும் பார்த்திருக்கிறேன், எனவே நான், நமது கழகத்துக்குப் போதுமான தேவையான பணபலம் இல்லை என்பதுபற்றி எண்ணாமலுமில்லை, சில வேளைகளிலே ஏக்கம்கூட அடைகிறேன், ஆனால் உன்னிடம் சொல்லுவதிலே மகிழ்ச்சி அடைகிறேன், மனம் உடைந்துபோகவில்லை — அந்த நிலை ஏற்படவிடக்கூடாது என்று நமது கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், ஆண்டியப்பனுக்கு இலவசமாக மருத்துவமும்பார்த்து, பழம் பண்டமும் வாங்கித்தந்த டாக்டர்போல, பரிவுடன் நடந்துகொள்ளக் காண்கிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற கிழமை சென்னை மூலக்கொத்தளம் வட்டாரத்தில் நடைபெற்ற கூட்டத்தில், தேர்தல் நிதி 100 ரூபாய் தருவதாகச் சொன்ன நமது தோழர்கள், 50 மட்டுமே கொடுத்தனர் — எனக்கு பேச்சே எழவில்லை! அதனை நான் கூட்டத்திலேயே குறிப்பிட்டுக் கூறினேன் —பெருமையும் நம்பிக்கையும் கொள்ளச் செய்யும் சேதி கேள், தம்பி—நான் சிறிதளவு சலிப்புடன் பேசுவது கண்ட தோழர்கள் கூடிக் கலந்து பேசி, என்னிடம் தெரிவித்தனர், இந்த வட்டாரத்தின் சார்பாக நமது நண்பர் துரைராஜ் அவர்கள் ஆயிரம் ரூபாய் தேர்தல் நிதி அளிக்க இசைந்திருக்கிறார் — என்று கூறினர். மகிழ்ந்தேன்! கூட்டத்தில் இதனை அறிவித்தேன்-அப்போது மக்கள் அந்தச் சந்தோஷச் செய்தியை எத்துணை ஆர்வத்துடன் வரவேற்றனர் என்பதைக் கண்டு நான் பூரித்துப்போனேன்! பழம் வாங்கி வந்து தந்ததும், ஆண்டியப்பன் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பான்— அதுபோலானேன்!

நமது கழகத்தின் வரலாற்றிலே, மிக முக்கியமான கட்டம், இந்தத் தேர்தல்.

நம்மைச்சுற்றி நச்சு நினைப்பினர் ஏவிவரும் பொச்சரிப்புகள் கொஞ்சமல்ல. நம்மைப்பற்றி, நடமாடவிடும் நிந்தனைகளின் அளவும் அதிகம், வகையும் பலப்பல. ஒரு முகாம், இருமுகாமிலிருந்து மட்டுமல்ல, பல்வேறு முகாம்களும் மும்முரமாக இந்தத் திருத்தொண்டில் ஈடுபட்டு, தத்தமது முழுச் சக்தியையும் பயன்படுத்துகின்றன. இதை நான் எதிர்பார்த்ததுண்டு. எளிதிலே வழி விடுவார்கள் என்று எண்ணிடும் ஏமாளியா, நாம்; அல்லவே!!

பொதுவாழ்வுத்துறையில் புதியவர்கள் என்று அலட்சியமாகப் பேசுவது மட்டுமல்ல, புகக்கூடாதவர்கள் என்று வெறுப்புடன் பேசுவோர் நிரம்பிய நிலையை நான் அறிவேன். அவர்கள், நாம் ஈடுபடும் இந்தத்தேர்தல் முயற்சியில், முதல் கட்டத்திலேயே தடுத்து நிறுத்தி, தகர்த்து அழிக்காவிட்டால், ஒருமுறை 'உள்ளே'போக இடமளித்துவிட்டால், பிறகு, அந்தக் கழக வளர்ச்சியைத் தடுக்க முடியாது என்ற திகில்கொண்ட நிலையில், முதல் முயற்சியையே, முழுப்பலம் கொண்டு தாக்கி முறியடித்தாக வேண்டும் என்ற எண்ணத்துடன் பணியாற்றுவர் என்பதை எதிர்பார்த்தவனே! நான் இப்போது காணும் நிலைமை, நான் எதிர்பாராததுமல்ல, என்னைத் திடுக்கிடச் செய்யக்கூடியதுமல்ல, என்

நிலையே அது என்றால், தம்பி, எனக்கு அன்பும் ஆதரவும் அளிப்பதன் மூலம் ஆற்றலைத் தரும் உன் நெஞ்சு உரத்தை விளக்கவா வேண்டும்!

ஒன்று நான், காண்கிறேன்! எனக்கே, உள்ளத்தில் ஓர் சாந்தியும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது; நமது கழக வரலாற்றின் ஒவ்வோர் கட்டம் தெரியும்போதும், நாம் அதனைக் கடந்துசெல்ல முடியுமா, அல்லது பயணம் அந்த இடத்துடன் நின்று போகுமா என்ற ஐயப்பாடு-உனக்கோ உன்போன்ற எண்ணற்ற தம்பிகட்கோ அல்ல-எனக்கு ஏற்படுவதுண்டு! ஆனால், நாட்டிலே, தம்பி, நீ நற்பணியாற்றி அதன்மூலம் திரட்டித் தரும் ஆற்றல், என் ஐயப்பாட்டினை துரத்தி அடிக்கிறது, அச்சத்தை அயர்வைப் போக்குகிறது, வெற்றிமுரசு ஒலிக்கிறது; ஒவ்வோர் கட்டத்தின் போதும்.

இதனை, நான், நமது கழகத் துவக்கத்திலிருந்து காண்கிறேன்.

பெரியாருடைய திருமணத்தால், மனதிலே பேரிடி விழுந்த நிலை பெற்று, குருசாமியார் ஓடோடி வந்து, என்னைப் பிடித்திழுத்து கச்சையை வரிந்து கட்டிவிட்ட நாளிலிருந்து, இன்று என் செயலை, பிச்சுப்பிள்ளை விளையாட்டு என்று எண்ணிக்கொண்டு எச்சில் துப்புகிறாரே, இந்த நாள் வரையில், ஒவ்வோர் கட்டத்திலும், நான் இந்த கவர்ச்சியூட்டும் உண்மையைச் சந்திக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம்-என்று பெயரிட்டுக்கொண்டு, முன்புபோலவே நாம் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்—என்று, சென்னை முத்தியாலுப்பேட்டையில் ஓர் இல்லத்தில், ஆலோசனைக் கூட்டம் நடத்தியபோது நான் சொன்ன நேரத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிலிருந்து பொறுமைக்கு இருப்பிடம் எனத்தகும் நமது பொதுச் செயலாளர் வரையிலே கொதித்து எழுந்து, கோபம் கொப்பளிக்கும் நிலைபெற்று, நாம் ஏன் பெயர் மாற்றிக்கொண்டு போகவேண்டும், நமக்குத்தான் ஜனநாயக முறைப்படி பழைய பெயர் சொந்தம் என்று வாதாடிய காட்சி இப்போதும் நான் காண்கிறேன்.

அன்று, நாம் இந்த அளவிலும் வகையிலும் வளருவோம், பொது வாழ்வுத் துறையில் இந்தவிதமான நிலை பெறுவோம், ஒரு பொதுத் தேர்தலில் ஈடுபடும் கட்டம் காண்போம் என்று எண்ணியவர்கள் எத்தனைபேர் இருக்க முடியும் என்று எண்ணுகிறாய்!! ஆனால் அந்தக் கட்டம காண்கிறோம். காண்பாய்! காண்பாய்! மூடா, கேள், என் ஆரூடத்தை! இதுதான் நீ காணப்போகும் கடைசிக் கட்டம் என்று மனக்கசப்பு முற்றிவிட்ட காரணத்தால் பகை பேசும் நிலைக்குச் சென்றுவிட்ட சிலர் கூறுகின்றனர். தம்பி! நான் என் வரையில் பேசுவதானால், இதனைக் கூறுவேன்; இது கடைசிக் கட்டம் ஆகிவிட்டால் கூட நான் கவலைப்படமாட்டேன்; ஏனெனில் இவர்கள் 'ஆரூடம்' பலிக்கத்தக்கதானால், நான் இந்தக் கட்டத்தையே கூட எட்டிப்பார்த்திருக்கக் கூடாது. இந்தக் கட்டம் அளவுக்கு 'ஆயுள்'—இவ்வளவு ஆரூடத்துக்குப் பிறகும் இருந்ததல்லவா என்று கூட எண்ணி மகிழ்ச்சி கொள்வேன். என் சுபாவம் அப்படிப்பட்டது. ஆனால் கழகத்தின் சார்பில் பேசுகிறேன்—ஆரூடம் முன்பு பலித்ததில்லை, இம் முறையும் பலிக்காது! தம்பி! ஒவ்வோரு கட்டமாக நினைவிலே கொண்டுவந்து பார், நான் கூறுவதன் உண்மை தெரியும்! எத்தனை எத்தனை பழிச் சொற்களை, நம் வழியிலே கண்டோம்—பயணம் குந்தகப்படவில்லையே! காரணம் என்ன? ஐயப்பாடு, அச்சம், அயர்வு, எழும்போதெல்லாம், ஆர்வத்துடன், நமக்கு ஆதரவு அளித்திட பொது மக்கள் மகிழ்ச்சியுடன் முன்வருகின்றனர்! அண்ணன் அல்ல, பரிவுடன் பேசுகிறார்! தாய் அல்ல, ஆனால் பாசம் காட்டுகிறார்! டாக்டர், ஆனால் கட்டணம் வாங்கவில்லை! ஆண்டியப்பனைக் கண்டோமல்லவா—அதுபோலவே என்ன செய்வது என்று திகைக்கும்போதெல்லாம், என்ன நேரிடுமோ என்று கைபிசைந்து கொள்ளும்போதெல்லாம், நமக்கு உறுதுணையாக மக்கள் ஆதரவு வந்துசேருகிறது. அந்த ஆதரவே

**முகப்பில்......**

**அண்மையில் மலேயா சென்று கலைப்பணி புரிந்துவிட்டுத் தாயகம் திரும்பிய நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்கு தி. மு. க. தலைமை நிலையச் சார்பில் கடந்த 26ந் தேதி மாலை 'அறிவகத்தில்' நடைபெற்ற தேநீர் விருந்துக் காட்சிகள்.**

'அறிவகம்' — அச்சகம்—திடல் பல ஊர்களில் கழகப் பணி மனைகள் — இப்படி, உள்ளன. இரண்டு கிழமைகளுக்கு முன்புதான், குளித்தலைக்குப் பக்கத்திலே பணிக்கம்பட்டி என்ற சிற்றூரில் சிறிய அளவில் சிங்கார மாளிகை எனத்தகும் கழகக் கட்டிடம் ஒன்றினைத் திறந்துவைக்கும் வாய்ப்பினை, தோழர்கள் எனக்கு அளித்தனர். (அடுத்த கிழமை, படம் காணலாம்) அன்று நான், அந்தச் சிற்றூருக்குச் செல்வதற்கு, கடுமழையையும் சேறு சகதியையும் கடந்து செல்ல வேண்டி இருந்ததால், நீண்டநேரம் தாமதமாகிவிட்டது — எனினும் பல்லாயிரவர், மழை மிரட்டியது கண்டும் மனம் கலங்காமல் திடலில் இருந்தனர். அவர்கள் காட்டிய உற்சாகத்தை நான், காலங் கடந்து சென்ற பொறுப்புக் குறைந்த போக்குடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது, நானே சிறிதளவு வெட்கப்பட்டுப்போனேன். கழகப் பணிமனையைத் தோழர்கள் என்னிடம் காட்டியபோது, அவர்கள் முகம் எத்துணை பொலிவு பெற்றது.

இந்த எழுச்சி எல்லாம் கிள்ளுக்கீரை என்று கருதிக்கொண்டு, காரமான பேச்சினாலேயே நம்மை ஒழித்துவிடலாம் என்று எண்ணுவோர் குறித்து நான் என்ன கருதுவது!!

ஆண்டியப்பன், பாபம், விளைவு தெரியாமல், நெருப்பை எதிர்த்துக் கொண்டான், உடலெல்லாம் தீப்புண், நல்ல சிகிச்சை செய்து கொள்ளக்கூட, பணவசதி இடை

யாது, என்ன ஆகுமோ தெரியவில்லை—என்று பலரும் பரிதாபத்துடன் பேசிக்கொண்டிருந்திருக்கக் கூடும்; ஏனெனில் அவனிடம் பணம் இல்லை என்பது மட்டுமல்ல, அவனிடம் பரிவு காட்டிய பலரிடம் நல்ல மனம் இருந்தது, இருந்த பணம், போதுமானது அல்ல. எனவேதான் அவர்கள் எல்லோருமே திகைத்தனர்; ஆனால், யாரோ ஒருவன் துணிந்து, தூய உள்ளத்துடன் துவக்கினான்—நாம் ஆளுக்குக் கொஞ்சம் செலவிட்டால், சிறு துளி பெருவெள்ளம் ஆகாதா என்றான்—ஆண்டியப்பனுக்கு நல்லவிதமான மருத்துவ உதவி கிடைத்தது. அதுபோலத்தான், தம்பி, பெரிய செலவு, மிகப் பெரிய செலவு, பல இலட்சம் வேண்டும், என்று நாம் அனைவருமே பேசிக்கொண்டும், திகைத்தும், செயலற்று இருந்து விடாமல், சிறு துளி பெருவெள்ளம் என்ற முறையிலே, பணியைத் துவக்கி இருக்கிறோம் — நமக்கு நம்பிக்கை வளருகிறது.

பணபலம்கூட இருக்கட்டும், அறியாச் சிறுவர்கள் ஆழம் தெரியாமல் காலை விடுவதுபோல, ஏதோ சில குறிப்பிட்ட தொகுதிகளாகப் பார்த்து, பக்குவமாக நின்று பலன் காண்போம் என்று எண்ணாமல், **அகலக் கால் வைக்கிறார்களே!**—என்று ஆயாசக் குரலில் சிலர் பேசுவது கேட்கிறோம்.

நம்மிலே, சிலர் எப்படியாவது, சட்டசபைக்கு உள்ளே நுழைந்தாகவேண்டும் என்ற அரிப்பு இருந்தால் இந்த முறைதான் சாலச் சிறந்தது; ஐயமில்லை! ஆனால் நமது நோக்கம், எத்தனை தொகுதிகளிலே போட்டியிட்டு எத்தனை தொகுதிகளிலே வெற்றி காண்கிறோம் என்று கணக்கெடுத்துப் பார்த்து, அதற்குத் தக்கபடி 'கீர்த்தி — கித்தாப்பு' தேடிக்கொள்ள வேண்டும் என்பது அல்ல. எவ்வளவு பரந்த அளவில் ஜனநாயகக் கடமையைச் செய்ய முடிகிறது — எத்தனை விரிவான முறையில், தேர்தல் காலத்தில் அரசியல் எழுச்சி — விளக்கம் அளிக்க வசதி இருக்கிறது, என்பதைச் செயல்படுத்திப் பார்க்க வேண்டும் என்பதுதான். ஜனநாயகத்துக்கான சூழ்நிலையை எந்த அளவுக்கு உருவாக்க முடிகிறது என்பதுதான், இந்தத் தேர்தலில் நமக்கு உள்ள முக்கியமான பணி.

அரசியல் கட்சிகள் தேர்தல்களில் ஈடுபடும்போது, ஏற்படும் வெற்றி தோல்விகள்—ஓட்டு எண்ணி அறிவிக்கப்படும் முடிவுகள் காட்டும் பாடத்துடன் நின்றுவிடுவதல்ல. ஒரு கட்சியின் தாங்கும் சக்தியைக் கணக்கெடுப்பதே, இதிலே மிக முக்கியமான பாடமாகக்கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்தைத் தெளிவாக உணரவேண்டும் என்பதற்காக, நான், சென்ற கிழமை பிரிட்டனில், நடைபெற்ற பல தேர்தல்களின் கருத்துரையைக் காட்டும் ஏடொன்று படித்தேன்; நான் அதிலே கண்டவற்றில், சில இது போது தம்பி! உனக்கு கூறி வைப்பது முறை என்று எண்ணுகிறேன்; அரசியல் கட்சிகள், தேர்தல்களில் ஈடுபடுவதை, அங்கு எவ்வளவு முக்கியமான ஜனநாயகக் கடமையாகக் கருதுகிறார்கள், வெற்றி தோல்விபற்றி எந்த வகையில் பொருட்படுத்தாமல் கடமையாற்றுகிறார்கள், வெற்றி தோல்வி என்பது எப்படி எப்படி மாறி மாறி அடிக்கிறது, என்ற இன்ன பிற பாடங்களை, அந்த ஏடு காட்டுகிறது, (பிறிதோரிடத்தில் புள்ளி விவரம் காணலாம்) எனவே, நாம், சிந்தனைக் குழப்பத்துடன் இந்தப் பொறுப்பான காரியத்தில் ஈடுபடவில்லை; நல்ல தெளிவுடன், ஜனநாயகக் கடமை என்ற உணர்ச்சியுடன், இதிலே ஈடுபடுகிறோம்; மக்களின் ஆதரவு நிச்சயமாகிக் கொண்டு வருகிறது.

இடையில் நாம் காணும் இடையூறு அவ்வளவும், இயற்கையாக எழுந்து தீரவேண்டியவை. அது கண்டு நாம் ஆயாசப்படப்போவது இல்லை; நமது கழக வரலாறு நமக்குக் காட்டும் பாடம் நமக்குத் துணை நிற்கும்.

**"என் தொல்லைகளுக்கு எல்லையே கிடையாதா? என்று துயரப்படாதே! வைரம் என்பது நெடுங்காலமாய் நெருக்கிக் குறுக்கி வைத்த ஒரு துண்டு நிலக்கரியே என்ற உண்மையை நினைவுகொள்"** என்று நான் படித்த நினைவு வருகிறது. உனக்கு, அதனைக் கூறுகிறேன், வெற்றிபுரி செல்ல வேதனைபுரத்தைத் தாண்டித்தான் ஆக வேண்டும், தம்பி, மறவாதே.

அன்பன்,

அண்ணாதுரை


<u>தயாராகிவிட்டது!</u>

மு. கருணாநிதி எழுதிய

## வெள்ளிக்கிழமை

விலை ரூ. 2—0—0

உணர்ச்சிக் காவியம்! ஒப்பற்ற நவீனம்!

*

முரசொலி மாறன் எம்.ஏ., எழுதிய

## வால் நட்சத்திரம்

விலை ரூ. 1—0—0

சிந்தனைக் கருவூலங்கள்! சிறப்புமிகு கருத்துகள்!

**திராவிடப் பண்ணை,**

தெப்பகுளம், :: திருச்சி-2.

# சிறுமி கேட்டாள்!

"என்ன வேண்டும் உனக்கு...?" கேட்டாள் சக்கரவர்த்தினி பதினொருவயதேயுடைய பள்ளி மாணவியான ஏழைச் சிறுமியை.

"மகாராணியே? என்ன வேண்டுமென்று என்னைக் கேட்கிறீர்களே, என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா? என் உடையே சொல்லுமே வறுமையின் வாரிசு என்று, என் உடலே ஏழ்மையின் சின்னமென்று எடுத்துக்காட்டுமே, இந்த ஏழைக்கு வேறென்ன வேண்டும் தாயே? சோறும் உடையும் தாருங்கள்! என்று கேட்டாள் அந்தப் பெண்? இல்லை!

"எங்கள் நாடு தங்கள் ஆட்சிக்குள் வந்த பின்னர் எங்கள் உரிமைகள் எல்லாம் பறிக்கப் பட்டுவிட்டன தாயே, தங்கள் மொழியிலேயே தான் பேசவேண்டுமென்று அரசாங்கத்தின் கடுமையான உத்தரவு, மீறினால் கடுந்தண்டனை. எனவே எங்கள் சொந்தமொழியை நாங்கள் இரவிலே அதிகாரிகளின் காதுகளில் விழுந்து விடுமோ என்று பயந்து நடுங்கிக்கொண்டே வீட்டிலே பேசவேண்டிய வெட்ககரமான நிலையிலிருக்கிறோம். இந்த இழிநிலையைப் போக்க வேண்டும். எங்கள் சொந்த மொழியை நாங்கள் தாராளமாகப் பேச உரிமை கொடுங்கள். எங்கள் நாட்டிற்கு விடுதலை கொடுக்காவிட்டாலும், முதலில் எங்கள் மொழிக்காவது விடுதலை கொடுங்கள் தாயே" என்று மகாராணியின் கால்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டபடி கெஞ்சினாள் அச்சிறுமி.

மகாராணியோ திடுக்கிட்டாள். சிறுமியின் துணிவையும் திறமையையும், நாட்டு மொழிப் பற்றையும் கண்டு உள்ளூர வியந்தாள்—மகிழ்ந்தாள், என்றாலும், சாமான்யமானதல்லவே அச்சிறுமியின் வேண்டுகோள். என்ன வேண்டும் என்று கேட்டோம். போயும் போயும் இப்படி ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டு விட்டாளே, நாம் சற்றும் எதிர்பாராதபடி இப்பெண். இது முடியாது, வேறு ஏதாவது கேள் என்று சொல்லிவிடத்தான் முடியுமா? அப்படிச் சொல்வது நமக்கு அவமானமல்லவா? எப்படி இதைச் சக்கரவர்த்தியிடம் சொல்லிச் சரிக்கட்டுவது என்று ஏங்கினாள் மகாராணி, என்றாலும் உடனே கவலையையும், திகிலையும் சமாளித்துக் கொண்டு "ஆகட்டும் குழந்தாய், உன் ஆவலைப் பூர்த்தி செய்கிறேன்" என்று அச்சிறு மாணவியைத் தூக்கி அணைத்து வாழ்த்திவிட்டுப் பள்ளியைவிட்டு வெளியேறினாள் சக்கரவர்த்தினி.

கடந்த முதலாவது உலக மகாயுத்தத்திற்குப் பிறகு, ஆஸ்திரியா ஜெர்மனியின் பிடியில் சிக்கியது. அப்போதைய ஜெர்மனியின் சர்வாதிகாரி கெய்ஸர் அந்த ஆஸ்திரிய நாட்டிலே தன் கொடுங்கோலாட்சியை நடத்திக்கொண்டிருந்தான். ஜெர்மனிய மொழி அரசியல் மொழியாயிற்று. அது மட்டுமல்ல—எல்லோரும் எங்கும் எப்போதும் கண்டிப்பாய் ஜெர்மன் மொழியிலேயே பேசவேண்டும்; அவர்களின் சொந்த மொழியிலே பேசக்கூடாது என்பது கடுமையான உத்தரவு. இந்த நிலையிலேதான் ஒரு நாள் கெய்ஸரின் மனைவி ஆஸ்திரிய நாட்டிலுள்ள அல்ஸோரைன் மாகாணத்தைச் சேர்ந்த ஓர் ஊரிலுள்ள ஆரம்பப்பள்ளிக்கு சென்றிருந்தாள். அங்கு ஒவ்வோர் மாணவ மாணவிகளின் அறிவுத் திறனைப் பரீட்சித்து வரும்போது, மேலே கண்ட மாணவி, விரைவாகவும்—விவேகமாகவும் பதிலிறுத்ததைக் கண்டு வியந்து பாராட்டி அம்மாணவச் சிறுமிக்கு ஏதாவது பரிசளிக்க வேண்டும் என்ற ஆவலுடனே, "என்ன வேண்டும் உனக்கு?" என்று கேட்டாள் கெய்ஸரின் மனைவி.

இங்கே தமிழகத்திலே இந்தி மொழி ஆதிக்கம் மெல்லமெல்ல நுழைந்துகொண்டிருக்கிறது. புகைவண்டி நிலையப் பெயர்ப் பலகைகளிலே இந்தி முதலிடம் பெற்றுவிட்டது. அஞ்சல் அட்டையிலே இந்தி. இப்போது வரப்போகும் நாணயங்களிலே இந்தி. இந்தியை அரசியாக்கி அரியாசனத்திலமர்த்திவிட்டு, தமிழ்த் தாயை அவளுக்குத் தாதிப் பெண்ணாக்கும் சதி நடக்கிறது, பகிரங்கமாக! தமிழகத்தை—தமிழர்களை டில்லி எகாதிபத்தியம் அலட்சியப்படுத்துவது மட்டுமல்ல—அடிமைத் தளையை மேலும் இறுக்கிப் பிடிக்கிறது.

'ஆந்திரா'—'கேரளம்' — இரண்டும் மொழி அடிப்படையிலே தங்கள் நாட்டுக்குப் பெயர் வைத்துக்கொண்டன.

இங்கோ, நாடு முழுதும், 'தமிழ்நாடு' என்று குரலெழுப்பியும்—சங்கரலிங்கனார் உயிர்த் தியாகம் செய்த பிறகும்கூட தமிழ்நாடு என்று பெயர் வைக்க நெஞ்சுரமற்றுக்கிடக்கின்றனர் அமைச்சர்கள். வெட்கம்? வெட்கம்? பதினொரு வயதுப் பள்ளி மாணவிக்குள்ள துணிவில்லை — நாட்டுப் பற்றில் — மொழிப்பற்றில் கோடியிலொருபங்கு கூட இல்லையே, குட்டக் குனிந்து கொடுத்துக்கொண்டே வடக்குக்கு வக்காலத்து வாங்கும் நமது அமைச்சர்களுக்கு.

— வீ. சம்பந்தன்.

REGD. NO. M. 4642 போன் நெ. 15


# 'திராவிடநாடு' பொங்கல் மலர்

சிந்தனைச் செல்வங்கள் அறிவுலகக் கட்டுரைகள்
சிறுகதைகள் ஓவியங்கள்

புதுமை விருந்து ! ★ அரிய படைப்பு !!

மூவர்ண முகப்பு 120-பக்கங்கள்

விலை 1--8--0

இந்த ஆண்டு பொங்கல் மலர் மிகச்சிறந்ததாக விளங்கும்

ஏஜண்டுகளிடம் இப்போதே உங்கள் பிரதிகளுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். தபால்மூலம் சந்தாதாரர்களுக்கு மட்டுமே அனுப்பப்படும்.

**ஏஜண்டுகள்:**— வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை விபரத்தை 20—12—56க்குள் தெரிவிக்கவேண்டும். 25—12—56க்குள் கழிவு நீக்கிய **முன் பணம்** முழுவதும் அனுப்பவேண்டும். முன்பணமின்றி மலர்கள் அனுப்பப்படமாட்டாது.

**சந்தாதாரர்கள்:**— ரூ. 1—8—0 முன்னதாகவே அனுப்பிப் பதிவுசெய்துகொள்ளவும். மலரைப் பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 1—15—0 அனுப்பவும்.

# தேர்தல் நிதிக்காக

# கலை விருந்து

டிசம்பர் 9

சென்னை S. I. A. A. திடலில்

கே-ஆர். இராமசாமி, எம்-ஜி. இராமச்சந்திரன், எஸ்-எஸ். இராசேந்திரன்
நாடக மன்றங்கள் அளிக்கும்

★ ஓர் இரவு

★ சுமைதாங்கி

★ மணிமகுடம்

காட்சிகள் நடைபெறும்.

கலை விருந்து பெறுவீர்! காணிக்கை தருவீர்!!

டிசம்பர் 9 உங்கள் நாள் ★ கட்டணம்:- ரூபா 10, 5, 3, 2, 1


காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு 'திராவிடநாடு' அச்சகத்தில்
... அச்சிட்டு வெளியிடப்படுகிறது.